Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
MONDAY, JUNE 20, 2022

திங்கட்கிழமை ஜுன் 20, 2022 | ஒளி: 08 கதிர் 027 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# 3 நாள்களுக்கு வரிசை வேண்டாம்



- டீசலுக்கு பற்றாக்குறை இல்லை; சிக்கனமாகப் பயன்படுத்தவும்
- மேலதிகமாக பெற்றொலை விநியோகிக்க ஐ.ஓ.சியிடம் கோரிக்கை
- பெற்றோல், டீசல் கப்பல்களுக்கு 90 மில். கடன் கடிதம் திறப்பு
- அத்தியாவசிய ஊழியர்களுக்கு வெள்ளியன்று எரிபொருள்
- அத்தியாவசியமற்ற பயணங்கள் செல்ல வேண்டாம்
- இலக்கத்தகட்டின் அடிப்படையில் எரிபொருள் வழங்கும் பொறிமுறை

பா.நிரோஸ்ஸ

திர்வரும் மூன்று நாள்களுக்கு (ஜூன் 20 முதல் 22) எரிபொருள் வரிசையில் நிற்க வேண்டாம் என்று பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ள மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, 23 ஆம் திகதி முதல் எரிபொருள் விநியோகம் வழமைக்குத் திரும்பும் என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## 21 இலங்கையர் நாடுகடத்தல்

சட்டவிரோதமாக படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்க முயன்ற போது கைது செய்யப்பட்டு அவுஸ்திரேலியாவிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட இலங்கை பிரஜைகள் 21 பேர், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக நேற்று (19) முற்பகல் நாட்டை வந்தடைந்தனர்.

அந்நாட்டு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு கிறிஸ்மஸ்

தொடர்ச்சி P2




அமைதியின்மை ஏற்பட்டால்

## குறைந்த பட்ச பலத்தை பயன்படுத்த ஆலோசனை

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் போராட்டங்கள் நடத்தப்படும் போது, அமைதியின்மையுடன் செயற்படுவோருக்கு எதிராக குறைந்த பட்ச பலத்தை பயன்படுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கிடையில் சனிக்கிழமை (18) இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

## ஐ.எம்.எஃப் பிரதிநிதிகள் இன்றைய தினம் வருகை




தற்போதைய பொருளாதார நெருக்கடியை சமாளிக்க இலங்கைக்கு ஆதரவளிக்கும் வகையில், அரசாங்கம் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எஃப்) பிரதிநிதிகள் குழு இன்று (20) நாட்டுக்கு வருகை தரவுள்ளது.

தொடர்ச்சி P2

## ஆளுங்கட்சி எம்.பிக்களுடன் ஜனாதிபதி கோட்டா சந்திப்பு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவுக்கும் இடையிலான கலந்துரையாடல் இன்று (20) இடம்பெறவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சரவை கூட்டத்துக்கு முன்னர், இன்று (20) மாலை 5.00 மணிக்கு கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக தெரியவருகிறது.

தொடர்ச்சி P2



எரிபொருள் வரிசைகளால்

## விரக்தியின் விளிம்புக்கு தள்ளப்பட்ட மக்கள்

### பல இடங்களிலும் வீதி மறியலும் போராட்டமும் முன்னெடுப்பு



நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டால் விரக்தியடைந்துள்ள மக்கள், கடந்த சில நாள்களாக நிலவும் பெற்றோல் தட்டுப்பாடு மற்றும் நீண்ட வரிசைகளில் காத்திருக்கின்றமை காரணமாக பல இடங்களில் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

தொடர்ச்சி P2

## சைக்கிள் ஓட்டுநர்களுக்கு விசேட வழிகாட்டுதல்கள்



நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக சைக்கிள் பாவனையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், விபத்துகளை குறைப்பதற்கான விசேட வழிகாட்டுதல்களை பொலிஸார் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இதுபோன்ற வழிகாட்டுதல்களை கடைபிடிப்பது குறித்தும் கவனம் செலுத்துமாறு

தொடர்ச்சி P2

எரிபொருள் நெருக்கடியால்

## பல்கலைக்கழகங்களும் ஸ்தம்பிதம் அடைந்தன




நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக பேராதனை பல்கலைக்கழகத்தை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், ராஜரட்ட பல்கலைக்கழகத்தின் விரிவுரைகளை இன்று (20) முதல் இரண்டு வாரங்களுக்கு ஒன்லைனில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## இளைஞனை பலியெடுத்த எரிபொருள் நெருக்கடி

மாத்தளை ரயில் நிலையத்தில் இருந்து பெலியத்தை நோக்கி புறப்பட இருந்த ரயிலில் இருந்து தவறி விழுந்த இளைஞரொருவர், ரயிலின் அடியில் சிக்கி உயிரிழந்தார்.

தொடர்ச்சி P2

அரசாங்கத்துக்கு எதிராக

## அடுத்தவாரம் முதல் பாரிய போராட்டம்

ஐக்கிய மக்கள் சக்தி

மக்களை தொடர்ந்து இன்னல்களுக்குள் தள்ளும் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களுக்கு எதிராக, நாடு முழுவதும் அடுத்த வாரம் முதல் பாரிய தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்தது.

தொடர்ச்சி P2

அரசாங்கம் மீதான அவநம்பிக்கை

## கடும் எதிர்விளைவுகளை ஏற்படுத்தும்

BAR ASSOCIATION OF SRI LANKA
இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்

அரசாங்கம் மற்றும் சட்டத்தை அமல்படுத்தும் நிறுவனங்களுக்கு எதிராக மக்களிடையே ஏற்படும் அவநம்பிக்கையானது, பாரிய எதிர் விளைவுகளை ஏற்படுத்துவதுடன், சீர்படுத்த முடியாத தீங்கு விளைவிக்கும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், சனிக்கிழமை (18) வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

## வெளிப்படைத் தன்மையுடனும் நேர்மையுடனும் இலங்கை செயற்படுகிறது

### மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரிடம் அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



மனித உரிமைகள் பேரவையின் 50ஆவது அமர்வின் பக்க அம்சமாக, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ், மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செயலாளர் நாயகம் மற்றும் சீனா, ஐரோப்பிய ஒன்றியம், அவுஸ்திரேலியா, கொரியக் குடியரசு, ஜேர்மனி, நெதர்லாந்து, ஜோர்தான் ஆகிய நாடுகளின் நிரந்தரப் பிரதிநிதிகளை சந்தித்தார்.

மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிச்செல் பச்லெட் உடனான சந்திப்பின் போது, மனித உரிமைகள் பேரவை உட்பட சர்வதேச அமைப்புடன் இலங்கை நேர்மையாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் செயற்படுவதாக உயர்ஸ்தானிகருக்கு உறுதியளித்தார்.

காணாமல் போனோர் அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம், நிலையான அபிவிருத்தி இலக்கு பேரவை, இலங்கை மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட உள்ளூர் பொறிமுறைகளால் நாட்டில் எட்டப்பட்டுள்ள பெறுபேறுகளையும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விரிவாக விவரித்தார்.

தொடர்ச்சி P2

## 13 பேரை காவு கொண்ட வரிசைகள்



எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசைகளில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13 ஆக அதிகரித்துள்ளதாக பொலிஸ் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மக்களுக்கு அரசாங்கம் உடனடியாக இழப்பீடு வழங்க வேண்டும் என நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, இவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படாவிட்டால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முறைப்பாடு செய்யவுள்ளதாக ஐக்கிய தொழிற்சங்க கூட்டமைப்பின் அழைப்பாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் எரிபொருள், எரிவாயு நெருக்கடிகளால் சமீப காலங்களில் வரிசைகளில் நிற்பவர்கள் உயிரிழக்கும் சம்பவங்கள் பதிவாகியிருந்தன.

இந்நிலையில், கடந்த சில நாள்களாக, சில கிலோ மீற்றர் நீளம் வரை எரிபொருள் வரிசைகள்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 3 நாட்களுக்கு வரிசை வேண்டாம்

அமைச்சில் நேற்று (19) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்த அமைச்சர், எரிபொருளுக்காக நாட்டில் காணப்படும் நீண்ட வரிசைகள் தொடர்பில் தாம் கவலை கொள்வதாகவும் இதற்காக பொதுமக்களிடம் தாம் பகிரங்கமாக மன்னிப்பு கோருவதாகவும் தெரிவித்தார்.

அத்தியாவசியமற்ற பயணங்களுக்கு எரிபொருளை பெற்றுக் கொள்ள வேண்டாம் என்றும் 10 நாள்களுக்கு தேவையான டீசல் கையிருப்பில் உள்ளதால் தேவைக்கு அதிகமாகவே எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு டீசல் விநியோகிக்கப்படுகிறது. இதனை பெற்றுக்கொள்வதற்கான காலத்தை முகாமைத்துவம் செய்து கொள்ள வேண்டும்.

எரிபொருள் விநியோக செயற்பாடுகள் வழமைக்குத் திரும்ப சில காலம் எடுக்கும். இதற்காக வீதிகளை மறிக்க வேண்டாம். எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பாதுகாப்பு கடமைகளில் உள்ள பாதுகாப்பு தரப்பினருக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஜூன் 23, 24ஆம் திகதிகளில் நாட்டை வந்தடையவுள்ள பெற்றோல், டீசல் கப்பல்களுக்காக 90 மில்லியன் அமெ. டொலர் கடன் கடிதங்கள் திறக்கப்பட்டுள்ளன.

மேலும், திருகோணமலை முனையத்தில் வைக்கப்பட்டுள்ள சுமார் 10,000 மெற்றிக் தொன் பெற்றோலைப் பயன்படுத்தி, நாளாந்தம் மேலதிகமான பெற்றோலை சந்தைக்கு விநியோகிக்குமாறு லங்கா ஐஓசியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எரிபொருளை விநியோகிக்க விசேட பொறிமுறை வாகன இலக்கத் தகடுகளின் இறுதி இலக்கங்களின் அடிப்படையில், தெரிவு செய்யப்பட்ட நாள்களில் எரிபொருள் விநியோகிக்கப்படும். அதற்கமைய தனிப்பட்ட சொந்த பயன்பாடுகளுக்காக வீடுகளில் பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு வாரத்தில் இரு நாள்கள் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட உள்ளது.

அத்துடன், தனியார் பஸ்கள், பாடசாலை போக்குவரத்து வாகனங்கள், அரச, தனியார் ஊழியர்களுக்கான வாகனங்கள், சுற்றுலா வாகனங்களுக்கு தேவையான எரிபொருளை அருகிலுள்ள இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்களில் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் தனியாருக்கு சொந்தமான பஸ்கள் 24 மணித்தியாலங்களும் போக்குவரத்து சபை டிப்போக்களில் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்தப் பஸ்கள் ஏனைய எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்பாக சென்று நெரிசலை ஏற்படுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். பிரதேச சபை, பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட முழுநேர தொழில்முறை ஓட்டோ சாரதிகளுக்கு தேவையான எரிபொருளை தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

வைத்தியர்கள் உள்ளிட்ட சுகாதார பணியாட் தொகுதியினர், பொலிஸார், இலங்கை மின்சார சபை ஊழியர்கள், நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் ஊழியர்களுக்கு தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிலையங்களில் வெள்ளிக்கிழமை தோறும் எரிபொருளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எப்போது எரிபொருள் வரும் என முன்கூட்டியே அறிவிக்கும் நடைமுறையால் தேவையற்ற குழப்பங்கள் ஏற்படுவதாக, பாதுகாப்புத் தரப்பினர் தமக்கு சுட்டிக்காட்டிமையைக் கருத்தில் கொண்டு, எரிபொருள் தொடர்பான முன்கூட்டிய அறிவிப்புகள் தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக அமைச்சர் கூறினார்.

எரிபொருள் விநியோக செயற்பாடுகளுக்கு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், ஐ.ஓ.சி எரிபொருள் நிறுவனம் என்பவற்றை தவிர்ந்த ஏனைய நிறுவனங்களுக்கு அனுமதியளிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்பட உள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

வங்கிகளில் கடன் கூற்று கடிதத்தை பெறாது கடன் அடிப்படையில் நாட்டுக்குள் எரிபொருளை விநியோகிப்பதற்கு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு இதனூடாக அனுமதி கிடைக்கும். குறைந்தது இதனை ஒரு வருட காலத்துக்கு முன்னெடுக்க வேண்டும். இதனை செயற்படுத்த குறைந்தது இரண்டு மாதங்கள் செல்லும்.

எரிபொருளை பெற்றுத்தருமாறு வீதிக்கு இறங்கி சிலர் போராடுகிறார்கள். தங்களுக்குத் தேவையான மண்ணெண்ணெய், டீசல் எங்கிருந்து கிடைக்கிறது எனவும் அமைச்சர் இதன்போது கேள்வி எழுப்பினார். எனவே இப்போராட்டங்களுக்குப் பின்னர் அரசியல் இருப்பதாகவும் தெரிவித்தார்.

# வெளிப்படைத்தன்மையுடனும்...

இலங்கைக்கு விஜயம் செய்வதற்காக உயர்ஸ்தானிகருக்கு முன்னர் விடுக்கப்பட்ட அழைப்பு இன்னும் அப்படியே இருப்பதாக அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார். தற்போதைய அமர்வின் ஆரம்பத்தில் உயர்ஸ்தானிகர் அறிவித்தமைக்கு அமைய, அவரது நிறைவான ஓய்விற்காக வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

சீனாவின் நிரந்தரப் பிரதிநிதியான தூதுவர் சென் சூ உடனான இருதரப்பு சந்திப்பின் போது, இலங்கைக்கு பல ஆண்டுகளாக அளித்து வரும் ஆதரவிற்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் சீனாவுக்கு நன்றி தெரிவித்தார். நாடு எதிர்கொள்ளும் பொருளாதார சவால்கள், குறிப்பாக வெளிநாட்டு இருப்புகள், உணவு, எரிசக்தி பாதுகாப்பில் அவற்றின் தாக்கம் தொடர்பான பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடிய பேராசிரியர் பீரிஸ், கொவிட்-19 ஐ எதிர்த்துப் போராடுவதற்காக சீனா அனுப்பிய கணிசமான அளவிலான உணவு, மருந்துப் பொருட்கள், தடுப்பூசிகளுக்கு பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

பேராசிரியர் பீரிஸ் மற்றும் அவுஸ்திரேலியாவின் நிரந்தரப் பிரதிநிதியான தூதுவர் அமண்டா கோரேலி ஆகியோர் அவுஸ்திரேலியாவின் உள்விவகாரங்கள் மற்றும் சைபர் பாதுகாப்பு அமைச்சர் திருமதி கிளாரி ஓ நீலின் இலங்கைக்கான விஜயம் குறித்து கலந்துரையாடினர். இலங்கை மனிதாபிமானப் பேரிடராகக் கருதும் சட்டவிரோத இடம்பெயர்வு விவகாரம் தொடர்பாக தொடர்ச்சியான ஆதரவை இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி அவுஸ்திரேலியாவிற்கு நல்குவார் என உறுதியளித்தார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செயலாளர் நாயகம் திரு. ஜெகன் சப்பகைனைச் சந்தித்த அமைச்சர் பீரிஸ், முன்னுரிமையின் அடிப்படையில் இலங்கைக்கு மருந்துகள் மற்றும் சுகாதார உபகரணங்களை வழங்குமாறு கோரிக்கை விடுத்தார்.

# கடும் எதிர்விளைவுகளை ஏற்படுத்தும்

நிலைமையின் பாரதூரத்தன்மையை மக்களுக்கு தெரிவிப்பதை விடுத்து, நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான செயற்பாடுகள் மற்றும் அதன் முன்னேற்றம் தொடர்பில் பொதுமக்களை தெளிவுபடுத்துவது அத்தியாவசியமானது எனவும் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு செயற்படுகையில், பொதுமக்களின் நம்பிக்கையை பெறுவது மிகவும் முக்கியமானது எனவும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டில் நிலவும் மோசமான சூழ்நிலை மக்களை விரக்திக்கு தள்ளியுள்ளதன் விளைவாக விரக்தி மற்றும் கோபம் ஏற்படுகிறது எனவும் கடந்த சில நாள்களாக நாட்டின் பல பகுதிகளில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொதுமக்களின் அசௌகரியம் அதிகரித்துள்ளது எனவும் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அண்மையில் குருநாகல், மஸ்பொத்தவில் உள்ள எரிபொருள் நிலையத்தில் துப்பாக்கி ஏந்திய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பொதுமகன் ஒருவரை தாக்கும் காட்சிகளும், அத்துருகிரியவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஏற்பட்ட வார்த்தைப் பரிமாற்றங்களும் வன்முறைக் காட்சிகளும் நாடு முழுவதிலும் நிலவும் கொந்தளிப்பான சூழலுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

சட்டத்தை அமல்படுத்துபவர்கள் பொதுமக்களுடன் பழகுவதில் நிதானத்துடனும் எச்சரிக்கையுடனும் செயல்படுவது மிகவும் முக்கியமானது. பொலிஸ் அதிகாரிகள் தங்கள் கடமைகளைச் செய்யும்போது புரிந்துணர்வுடனும் பச்சாதாபத்துடனும் செயல்படுவதும், பொதுமக்களின் பெரும் துன்பத்தை ஒப்புக்கொள்வதும் அவசியம் என்று அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சட்ட அமலாக்க அதிகாரிகள் எல்லா நிகழ்வுகளிலும் நேர்மையாகவும் பாரபட்சமின்றியும் செயல்பட வேண்டும். பாரபட்சமான மற்றும் நியாயமற்ற செயல்களாகக் காணப்படும் எந்தவொரு செயல்களும் ஏற்கனவே இருக்கும் அவநம்பிக்கையை அதிகரிக்கும் என்று சங்கம் தெரிவித்தது.

பொதுமக்களின் சுமையைக் குறைக்கவும், பொதுமக்களின் தேவைகள் நியாயமான முறையில் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்தவும் அவசர நடவடிக்கைகளை எடுக்குமாறு இலங்கை அரசாங்கத்தை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சைக்கிள் ஓட்டுநர்களுக்கு...

போக்குவரத்து கடமையில் இருக்கும் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்த வருடத்தில் இதுவரை 1,202 வீதி விபத்துகள் இடம்பெற்றுள்ளதாகவும் அதில் 96 பேர் சைக்கிள் ஓட்டுநர்கள் எனவும் பேச்சாளர் குறிப்பிட்டார்.

வீதியில் சைக்கிள் ஓட்டுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர் என்றும் இந்த விடயத்தில் புதிய பாதுகாப்பு விதிமுறைகள் தேவைப்படுவதாகவும் அதற்கமைய, இரவு நேரத்தில் சைக்கிள் செலுத்தும் போது, முன்பக்கமும் பின்பக்கமும் பிரதிபலிப்பான்கள் பயன்படுத்துவதால் சைக்கிள் ஓட்டுபவர்களை வாகனம் செலுத்துவோர் இலகுவாக அடையாளம் கண்டுகொள்வர்.

மேலும், சைக்கிள் ஓட்டிகள், பிரகாசமான நிற ஆடைகளை அணிந்து இரவில் பயணம் செய்வதால் விபத்துகள் குறையும்.

சைக்கிள் ஓட்டுநர்களும் வீதி சமிக்ஞைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும். வீதிகள் மற்றும் ஒழுங்கைகளை மாறும் போது பின்புறத்தில் உள்ள வாகனங்கள் மீது கவனம் செலுத்த வேண்டும்.

மேலும், சைக்கிள்களைச் செலுத்தும் போது வீதிப் பாதுகாப்பு குறித்து மக்கள் அவதானம் செலுத்த வேண்டும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 21 இலங்கையர் நாடுகடத்தல்

தீவில் தங்க வைக்கப்பட்டிருந்த இலங்கை பிரஜைகள், விசேட விமானம் மூலம் அவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்று குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நீர்கொழும்பு, முல்லைத்தீவு, சிலாபம், உடப்புத் தொடுவாய், மாரவில பகுதிகளைச் சேர்ந்தவர்களே, அவுஸ்திரேலிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நாடுகடத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கிறிஸ்துமஸ் தீவில் தங்கவைக்கப்பட்டுள்ள மேலுமொரு குழுவினர், இன்றையதினம் (20) நாட்டுக்கு கொண்டுவரப்படவுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

# ஐ.எம்.எ:ப் பிரதிநிதிகள் இன்றைய தினம் வருகை

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ள கடன் தொடர்பிலான கலந்துரையாடல்களை முன்னெடுத்துச்செல்லும் நோக்கிலேயே குறித்த குழு இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் பிரதிநிதிகள் குழு, ஜூன் 30 ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி, பிரதமர், நிதியமைச்சின் அதிகாரிகள், மத்திய வங்கியின் அதிகாரிகளை சந்திக்கவுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இதனிடையே, நாட்டிற்கு தற்போது வருகை தந்துள்ள இலங்கைக்கான கடன்களை மறுசீரமைப்பதற்கான நிதி, சட்ட ஆலோசனை நிறுவனங்களான 'லஸாட்', கிளிஸ்போட் ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகள், கண்காணிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளுக்கு இணங்க, இக்கட்டான நேரத்தில் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான தனது உறுதிப்பாட்டை ஐ.எம்.எஃப் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இளைஞனை பலியெடுத்த எரிபொருள் நெருக்கடி

திக்வல்ல, வலஸ்கலவை சேர்ந்த சந்தரு ருசர விதானகே என்ற 23 வயதான இளைஞனே குறித்த சம்பவத்தில் உயிரிழந்திருந்தார்.

தனியார் நிறுவனமொன்றில் பணியாற்றும் அவர், கடந்த வெள்ளிக்கிழமை (17) கடமை முடிந்து வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தார்.

வழமையாக பஸ்ஸில் பயணிக்கும் குறித்த இளைஞன், தற்போது பஸ்கள் குறைவாக சேவையில் ஈடுபடுவதாலும் கட்டண அதிகரிப்பாலும் ரயில் சேவையை நாடியுள்ளார்.

150 ரூபாய் கட்டணம் செலுத்தி பஸ்ஸில் பயணிப்பதற்கு பதிலாக 25 ரூபாயை செலுத்தி ரயிலில் பயணிப்பதால் செலவைக் கட்டுப்படுத்தலாம் என்ற தீர்மானத்திலேயே குறித்த இளைஞன் ரயில் நிலையத்துக்கு வந்துள்ளார்.

அவர் செல்லவிருந்த, 'சாகரிக்கா எக்ஸ்பிரஸ்' ரயில் இரண்டு மணித்தியாலங்கள் தாமதித்தே மாத்தறை ரயில் நிலையத்தை வந்தடைந்தது.

எனினும், பெருமளவிலான பயணிகள் ரயிலில் ஏறியமை காரணமான நெரிசலில் ரயிலில் ஏறுவதற்கு முயற்சித்த சந்தர்ப்பத்தில், ரயிலில் இருந்து கை நழுவி, நடைமேடைக்கும் ரயிலுக்கும் இடையிலுள்ள தண்டவாளத்தில் குறித்த இளைஞன் விழுந்துள்ளான்.

மிகுந்த சன நெரிசல் காரணமாக விபத்துக்குள்ளான அவரை, அருகிலிருந்த பொது மக்களும் மாத்தறை செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளும் மீட்பதற்கு ஒரு மணித்தியாலம் வரை முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இறுதியில் மீட்கப்பட்ட அவர், மாத்தறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும் உயிரிழந்திருந்தார்.

4 பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தின் மூத்த பிள்ளையான அவர், தந்தையின் வருமானம் போதாமை காரணமாக கல்வியின் பின்னர் வேலைக்குச் செல்ல தொடங்கியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

# ஆளுங்கட்சி எம்.பிக்களுடன் ஜனாதிபதி கோட்டா சந்திப்பு

தற்போதைய எரிபொருள் நெருக்கடி மற்றும் அதற்கான தீர்வுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட உள்ளதுடன், எதிர்வரும் பாராளுமன்ற வாரம் குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# குறைந்த பட்ச பலத்தை பயன்படுத்த ஆலோசனை

எரிபொருள் நிரப்பு நிலையங்களை அண்மித்த பகுதிகளில் இவ்வாறான கலவரங்கள் இடம்பெறும் போது, அப்பகுதியில் சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாக்கும் நோக்கிலேயே இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நிலவும் அமைதியின்மையை கட்டுப்படுத்த பொலிஸாருக்கு மேலதிகமாக இராணுவத்தினரின் உதவியை பெற்றுக்கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், அமைதியான போராட்டங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கூடாது என இந்த கலந்துரையாடலின் போது வலியுறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# அடுத்தவாரம் முதல் பாரிய போராட்டம்

ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உப தலைவர் டொக்டர் ராஜித சேனாரத்ன மேற்குறிப்பிட்ட விடயத்தை ஊடகங்களுக்கு அறிவித்தார்.

தற்போது பாராளுமன்றத்தில் உள்ள கட்சிகள், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள குழுக்களுடன் கலந்தாலோசித்து, வெகு விரைவில் சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு எதிர்க்கட்சிகளின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் இன்று (20) விசேட அறிக்கையொன்றை வெளியிட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# 13 பேரை காவு கொண்ட வரிசைகள்

நீண்டவண்ணம் செல்கின்றன. பாணந்துறை வேகட எரிபொருள் நிரப்பும் நிலையில் வரிசையில் நின்றிருந்த 55 வயதுடைய ஓட்டோ சாரதி ஒருவர் அண்மையில் உயிரிழந்திருந்தார்.

# பல்கலைக்கழகங்களும் ஸ்தம்பிதம் அடைந்தன

பேராதனை பல்கலைக்கழகத்தை மூடுவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் மாணவர் விடுதிகளையும் மூடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எம்.டி.லமவன்ச தெரிவித்தார்.

இதன்படி பேராதனை பல்கலைக்கழகத்தில் நடைபெறும் அனைத்து கல்வி நடவடிக்கைகள் மற்றும் பரீட்சைகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ராஜரட்ட பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பரீட்சைகளையும் எவ்வித மாற்றமும் இன்றி ஒரே மாதிரியாக நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் சஞ்சீவனி கினிகத்தர குறிப்பிட்டார்.

இதேவேளை, அடுத்த வாரத்தில் பல்கலைக்கழகங்களை நடத்துவது தொடர்பாகத் தீர்மானிக்கும் அதிகாரம் பல்கலைகழகங்களின் துணைவேந்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

# விரக்தியின் விளிம்புக்கு தள்ளப்பட்ட மக்கள்

இலங்கையின் பெரும்பான பகுதிகளில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் உள்ள வீதிகளை மறித்து தமது எதிர்ப்புகளை மக்கள் வெளிப்படுத்தியமையை அவதானிக்க முடிந்தது.

நேற்றையதினமே பெற்றோல் கப்பல் வருகை குறித்த அறிவிப்பு எரிசக்தி அமைச்சரினால் வெளியிடப்பட்டிருந்தது.

அதற்கு முன்னர், பெற்றோல் குறித்த அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை என்பதுடன், எரிபொருள் தகவல்களை வழங்கும் அரசாங்க இணையத்தளமும் முடக்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக, பௌசர்கள் வந்தடையுமா இல்லையா என்ற அறிவிப்புகள் தெரியாத நிலையில் பல இடங்களில் மக்கள் வரிசை நீண்டது.

இந்த விரக்தி நிலையே மக்கள் போராட்டத்துக்கு காரணமாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

> **எரிபொருள் தகவல்களை வழங்கும் அரசாங்க இணையத்தளமும் முடக்கப்பட்டிருந்ததன் காரணமாக, பௌசர்கள் வந்தடையுமா இல்லையா என்ற அறிவிப்புகள் தெரியாத நிலை காணப்பட்டது**

ஏ9 வீதியில் பயணித்த எரிபொருள் பௌசரை முற்றுகையிட்டு, வவுனியாவில் மக்கள் போராட்டம் மேற்கொண்டதையடுத்து, ஏ9 வீதியூடான போக்குவரத்துக்கள் பாதிப்படைந்தன.

யாழ்ப்பாணம், கல்வியங்காட்டு சந்தை கட்டட தொகுதியுடன் காணப்படும் எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் நேற்று குழப்பநிலை ஏற்பட்டிருந்தது.

# கள்ளக்கூட்டத்துடன் இணைய முடியாது

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

அரசாங்கத்தைப் பொறுப்பேற்குமாறு சிலர் கேட்டபோது, ஐக்கிய மக்கள் சக்தியோ அல்லது தானோ பொறுப்புகளை ஒருபோதும் தட்டிக்கழிக்கவில்லை எனவும் நாட்டைஅழிவுப்பாதைக்கு இட்டுச் சென்ற மொட்டு கள்ளக்கூட்டம் மற்றும் ராஜபக்ஷர்களுடன் இணைந்துஅரசாங்கங்களை அமைக்க முடியாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இன்று இந்நாட்டு மக்களுக்கு இந்த அரசாங்கம் மீது ஒரு துளியளவும் நம்பிக்கை இல்லை என தெரிவித்தஎதிர்க்கட்சித் தலைவர், இவ்வாறான குழுக்களுடன் இணைந்து ஆட்சியமைப்பதன் மூலம் இந்நாட்டை எவ்வாறுகட்டியெழுப்ப முடியும் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

ஐக்கிய மக்கள் சக்தி சமீப நாட்களாக கட்சியை



மறுசீரமைக்கும் வேலைத்திட்டத்தைதொடங்கியுள்ளதோடு, இதன் ஓர் அங்கமாக குருநாகல் மாவட்டத்தின் மாவத்தகம தேர்தல் தொகுதிக்கூட்டம் நேற்று (19) இடம்பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினரும்,முன்னாள் பிரதி அமைச்சரும், மாவத்தகம தேர்தல் தொகுதியின் பிரதானஅமைப்பாளருமான ஜே.சி. அலவத்துவலவின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்நாடு தொடர்ந்தும் மூடிய தன்மையுள்ள ஒரு நாடாக இருக்க முடியாது என தெரிவித்த எதிர்க்கட்சித்தலைவர், உலக நாடுகளுடன் தொடர்புகளை பேனும், உலக நாடுகளுக்கு நமது நாட்டை அனுகுவதற்கு ஏற்ற திறந்த தன்மை மற்றும் உலக நாடுகளுடன் நட்புறவுகளை பேனும் நாடாக மாற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

வீதிகளில் வரிசையில் நிற்கும் மக்களுக்கு, பாடசாலையை தவறவிட்டு வீட்டில் இருக்கும் குழந்தைகளுக்கு, எதிர்காலம் குறித்து விரக்தியடைந்துள்ள இளைஞர்களுக்கு, வழங்குவதற்கு இந்த அரசாங்கத்திடம் தீர்வோஅல்லது அதற்கான ஓர் வேலைத்திட்டமோ இல்லை என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், ஜனாதிபதி மற்றும்பிரதமர் ஆகியோர் இந்த துன்பங்களை தாங்கிக் கொள்ளுமாறே மக்களுக்கு அழைப்பு விடுப்பதாகவும் தெரிவித்தார்.

குறைபாடுகள் மற்றும் இயலாமைகள் குறித்து கூற அரசாங்கம் என்ற ஒன்று தேவையில்லை என தெரிவித்தஎதிர்க்கட்சித் தலைவர், ஒரு புதிய மக்கள் ஆணையைத் தாண்டி இந்த கடுமையான நெருக்கடிக்கு தீர்வு இல்லை எனவும் தெரிவித்தார்.

இன்றைய நாட்டின் தலைவிதிக்கு போலியான தேசப்பற்றும் ஒரு காரணமாகும் என தெரிவித்த எதிர்க்கட்சித்தலைவர், நாட்டின் உற்பத்தித் தொழிற்துறைகளை மேம்படுத்துவதே ஐக்கிய மக்கள் சக்தியின்தொலைநோக்குப் பார்வை எனவும் அவர் தெரிவித்தார்.

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை மேம்படுத்துவதும்,சுற்றுலாத் துறையை ஊக்குவித்தலும் மேற்கொள்ளப்படவேண்டும் என தெரிவித்த அவர்,திறமையான மற்றும் நிபுனத்துவமிக்க தொழிலாளர் படையை நாட்டில் உருவாக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.



# விஸ்வமடு விவகாரம் குறித்து இராணுவம் விளக்கம்

முல்லைத்தீவு, விஸ்வமடு பகுதியில் உள்ள இராணுவ காவலரணில் பாதுகாப்புப் பணியில் சனிக்கிழமை (18) இரவு 8 மணியளவில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரைத் குழப்பும் முகமாக, மதுபோதையில் இருந்த குழு ஒன்றினால் இராணுவத்தினர் மீது திட்டமிட்ட வகையில் போத்தல்கள் மற்றும் கற்களால் தாக்கப்பட்டதை தொடர்ந்து, அதனை முறியடிக்கும் வகையில் வானத்தை நோக்கிச் எச்சரிக்கை துப்பாக்கி சூடு நடாத்தப்பட்டது இராணுவம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருவரை கைது செய்ததன் பின்னர் ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. சம்பவத்தில் காயமடைந்த 3இராணுவத்தினர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது பாதுகாப்புப் படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் நிலவும் நல்லுறவையும் ஒத்துழைப்பையும் சீர்குலைக்க சில சந்தேகத்திற்கிடமான நபர்களினால் முன்னெடுக்க திட்டமிடப்பட்ட முயற்சி என்று முதற்கட்ட விசாரணைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட இருவரும் விஸ்வமடு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.



# குறுகியகால குத்தகைக்கு காணிகள்


விவசாய நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்காக அரசாங்கத்துக்கு சொந்தமான காணிகளை 6 தொடக்கம் ஒரு வருட குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக காணி அமைச்சின் உயரதிகாரி தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்படப்போகும் உணவுப் பஞ்சத்தை தவிர்ப்பதற்காக விவசாய நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்காக இவ்வாறு காணிகள் வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறுகிய கால குத்தகை அடிப்படையில் காணிகளையும் வழங்குவது தொடர்பான தீர்மானங்களை பிரதேச செயலகங்கள் ஊடாக மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான ஹெக்டேயர் காணிகள் தரிசு நிலங்களாக காணப்படுவதாகவும் அரசாங்கம் மதிப்பீடு செய்துள்ளது.

# இரு வருடங்களுக்குப் பின்னர் வாய்ப்பு



இரு வருடங்களுக்குப் பின்னர், கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் வருடாந்த எசல பெரஹராவை பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பெரஹரா வின் போது பாதுகாப்பு கடமைகளில் மாத்திரம் 6 ஆயிரத்திற்கும் அதிகமான போலீசார் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

ஜூலை 29ஆம் திகதி இந்த பெரஹரா ஆரம்பமாக உள்ளது.




# கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்: ஐஓசி

பௌசர் போக்குவரத்து குழுவினர், தவறான மற்றும் முறையற்ற நடவடிக்கையில் ஈடுபடுவது குறித்து வேதனையை வெளிப்படுத்துவதாக லங்கா ஐ.ஓ.சி தெரிவித்துள்ளது.

நடைமுறையில் உள்ள வழிகாட்டுதல்களின்படி சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் ஐ.ஓ.சி அறிவித்துள்ளது.

ஐ.ஓ.சி எரிபொருள் பௌசரில் இருந்து காரொன்றுக்கு பெற்றோல் கேன்களை வழங்கும் வீடியோ, சமூக ஊடகங்களில் நேற்று முன்தினம் வைரலாகியருந்த நிலையிலேயே மேற்குறிப்பிட்ட அறிவிப்பை ஐ.ஓ.சி வெளியிட்டுள்ளது.

# 120 கோடி ரூபாய் கஞ்சா மீட்பு

உடப்புவ பெரியப்பாடு கடற் பிரதேசத்தில் கடற்படையினர் நேற்று (19) அதிகாலை விசேட ரோந்து நடவடிக்கைகளை முன்னெடுத்தபோது, சுமார் 543 கிலோகிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. இதன் உள்ளூர் பெறுமதி 120 கோடி ரூபாயாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

கடற்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத போதைப்பொருள் வர்த்தக நடவடிக்கைகளை தடுப்பதற்கான விசேட ரோந்து நடவடிக்கைகளை கடற்படையினர் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

இதன்படி கடற் படையினரால் மேற்கொள்ளப்பட்ட ரோந்து நடவடிக்கை ஒன்றில் 170 பொதிகளில் இருந்த 120 கோடி ரூபாய் பெறுமதியான கஞ்சா மீட்கப்பட்டுள்ளது கடற்படையின்



ரோந்து நடவடிக்கைகளை முன்கூட்டியே அறிந்துகொண்ட சந்தேகநபர்கள் கஞ்சாவை கடலில் விட்டு விட்டு தப்பியோடி இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

கைப்பற்றப்பட்ட கஞ்சா போதைப்பொருள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

# 50 சதவீத தனியார் பஸ்களே ஓடும்

தனியார் பஸ்களுக்கு, இ.போ.ச பஸ் டிப்போக்களில் உரிய முறையில் எரிபொருளை வழங்க இணக்கம் எட்டப்பட்டுள்ளதால், நாளை தொடக்கம் 50 சதவீத தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்த இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, நாடுபூராகவும் 10,000க்கும் அதிகமான தனியார் பஸ்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

இ.போ.ச பஸ் டிப்பாக்கள் ஊடாக தினமும் 8 இலட்சம் லீற்றர் எரிபொருளை தனியார் மற்றும் இ.போ.ச பஸ்களுக்கு வழங்க எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர இணக்கம் தெரிவித்துள்ளதால், இந்த தீர்மானத்தை எடுத்ததாக தனியார பஸ் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த வாரத்துக்குள் 70 சதவீத தனியார் பஸ்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

# போராட்டக்காரர்களை கைது செய்வதற்கு எதிர்ப்பு



அத்தியாவசிய பொருட்களுக்கு நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் கட்டுப்பாடுகளால் மக்கள் பெரும் சிரமங்களை முகம் கொடுத்து வருவதை தடுப்பதற்கு பதிலாக, அரசாங்கத்துக்கு எதிராக போராடுபவர்களை பழிவாங்குவதற்கான செயற்பாடுகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாக, மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்தார்.

கோட்டா - ரணில் அரசாங்கம் நாட்டு மக்களின் கவனத்தை வேறுபக்கம் திருப்பிவிட்டு, அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் மீது போலியான குற்றச்சாட்டுக்களை சுமத்தி அவர்களை கைது செய்து பழிவாங்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகிறது. இதனை உடனடியாக அரசாங்கம் நிறுத்திக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

போராட்டக்காரர்களை பழிவாங்கும் செயற்பாடுகளை அரசாங்கம் நிறுத்திக் கொள்ளவில்லை என்றால், பாரிய போராட்டங்களுக்கு அரசாங்கம் முகம் கொடுக்க வேண்டி ஏற்படும் எனவும் டில்வின் சில்வா இதன்போது எச்சரித்தார்.

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்த 9 பேரை போலியான குற்றச்சாட்டுக்களை சுமத்தி ஒரு வாரங்களுக்குப் பின்னர் கைது செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. கைது செய்யப்பட வேண்டியவர்கள் இவர்கள் அல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களை காட்டிக்கொடுத்த தேசத்துரோகி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாம் ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறோம். அடக்குமுறைகளுக்கு முகம் கொடுக்க நான் தயார். ஆனால், அடக்குமுறைகளை நிறுத்திக் கொள்ளவில்லை என்றால் லட்சக்கணக்கான மக்கள் வீதிக்கு தயாராக இருப்பதாகவும் டில்வின் சில்வா இதன்போது எச்சரித்தார்.

# ஞானக்காவாக மாறிய ரணில்

## சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு

க. அகரன்


அனுராதபுரம் சோதிடர் ஞானக்காவின் வேலையையே தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ரணில் செய்து வருவதாக குற்றஞ்சாட்டிய வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், ராஜபக்ஷர்களை ரணிலே பாதுகாத்துவருகின்றார் என்றார்.

பத்மநாபாவின் 32 ஆவது நினைவு தினமும் தியாகிகள் தினமும் வவுனியாவில் அமைந்துள்ள ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் அலுவலகத்தில் நேற்று (19) இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

யுத்தத்தினை முடிவுக்கு கொண்டு வருகிறோம் என கூறி பல பில்லியன் கணக்கான நிதியை வெளிநாடுகளில் இருந்து கடனாக பெற்றதன் விளைவே





இன்று நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது என்றார்.

இந்த பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் தமிழ் மக்களுக்கு சாதகமான எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதில் தமிழ் கட்சிகளுக்கிடையில் பல்வேறுபட்ட கருத்து வேறுபாடுகள் உள்ளன.

பொருளாதார நெருக்கடியான நிலையில் நாம் சாப்பாட்டு பிரச்சினையை மாத்திரமே கதைக்க வேண்டும் அரசியல் பிரச்சினைகளை பற்றி பேச இது சந்தர்ப்பம் இல்லை என சிலர் கூறுகின்றனர்.

இந்த யுத்தத்தினை முடிவுக்கு கொண்டு வருவதற்காக மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் 20 இற்கும் மேற்பட்ட நாடுகளிம் ஆயுத்தினை கொள்வனவு செய்து யுத்த்தினை செய்து முடிவுக்கு கொண்டு வந்து சமாதானத்தினை நிலைநாட்டவுள்ளதாக கூறினார்கள். ஆனால் இன்று யுத்தம் முடிந்து 13 ஆண்டுகளாகியும் 13 ஆவது திருத்த சட்டத்தில் உள்ள மாகாணசபையை கூட நடத்தமுடியாதுள்ளது.

இந்த நிலையில் இலங்கையை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்க பல சர்வதேச நாடுகள் முன்வந்தாலும் கூட இலங்கை எதிர்பார்த்த உதவி கிடைக்கவில்லை. இந்தியா உதவிகளை வழங்கி வருகின்றது.

எனவே, இந்த சூழலில் தமிழ் தேசிய பரப்பில் உள்ள தமிழ் கட்சிகள் இந்தியாவிடம் வலியுத்த வேண்டிய விடயம் இலங்கைக்கு வழங்கும் ஒரு ரூபாயாக இருந்தாலும் கூட நிபந்தனை இன்றி வழங்க கூடாது என்பதே.இந்த நிலையில் தமிழ் தேசிய பரப்பில் உள்ள கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு மேசையில் இருந்து தற்போதைய பொருளாதார நெருக்கடியை எவ்வாறு நாம் கையாளப்போகின்றோம். இந்தியாவிடம் எவ்வாறு கூட்டாக கோரிகையை முன்வைக்க வேண்டுமென எந்தவித பேச்சுக்களையும் நடத்தவில்லை என்றார்.

தமிழினத்தின் எதிர்காலத்தினை வகுப்பதற்கு

# இதுவே தருணம்

■ நடராசா கிருஸ்ணகுமார்



தென்னிலங்கை அரசாங்கம் பாரிய பொருளாதார, அரசியல் நெருக்கடிகளுக்கு உள்ளாகியிருக்கும் இந்தச் சூழலை தமிழ் மக்களின் விடிவுக்காக பயன்படுத்துவதற்கு அனைத்து தமிழ் தலைமைகளும் தலைப்பட வேண்டியது தவிர்க்க முடியாத விடயமென ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

விடுதலைக்காக தமது இன்னுயிர்களை ஈகம் செய்த அத்தனை தியாகிகளுக்கும், ஏனைய அமைப்புகளைச் சேர்ந்த போராளிகள் பொதுமக்களுக்கும் நெஞ்சார்ந்த அஞ்சலிகளை செலுத்துகின்றோம், தற்போதைய நிலையிலாவது அவர்களின் கனவுகளை நனவுகளாக்குவதற்கு முயற்சிகளை எடுக்க வேண்டித் தலைப்பட்டிருக்கின்றோம்.

32ஆவது, தியாகிகள் தினத்தினையொட்டி அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கை சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றது. இதனால் அரசியல் நெருக்கடிகளும் ஏற்பட்டுவிட்டன. சர்வதேச நாணய நிதியத்தின் உதவி, இதர நாடுகளின் நன்கொடைகளைப் பெற்றுக்கொண்டாலும் தற்போதைய பொருளாதார நெருக்கடி முற்றுமுழுதாகச் சீரடையும் என்று கூறுவதற்கு இல்லை.

கடன்களுக்கு மேல் கடன்களை பெற்றுக்கொள்ளும் முறையால் நாடு இன்னமும் மோசமான நிலைமைக்குள்ளேயே தள்ளப்படும் பேராபத்து இருக்கின்றது. இவ்வாறான தருணத்தில், பொருளாதார, அரசியல் நெருக்கடியில் இருக்கின்ற நிலையில் தமிழினத்தின் எதிர்காலம் சம்பந்தமாக, கோரிக்கைகள் சம்பந்தமாக எவ்விதமான நகர்வுகளையும் முன்னகர்த்துவது பொருத்தமற்றது என்றதொரு தோற்றப்பாடு கட்டியெழுப்பபட்டுள்ளது.

இது தவறானதொரு நிலைப்பாடாகும். இதற்கு கடந்தகால அனுபவங்கள் பல உள்ளன. குறிப்பாக கூறுவதானால், போர் நிறைவுக்கு வந்தவுடன் இனப்பிரச்சினைக்கான தீர்வு வழங்கப்படும் என்று ராஜபக்ஷர்கள் கூறினார்கள். பின்னர், போர் முள்ளிவாய்க்கால் பேரவலத்துடன் நிறைவுக்கு வந்தபோது, அவர்கள் போர் வெற்றிவாதத்தில் மிதந்தார்கள்.

இடிபாடுகளுக்குள் நல்லிணக்கம் பற்றி பேச முடியாது என்றார்கள். அபிவிருத்திகள் மேற்கொள்ளாது இனங்களுக்கு இடையில் பிரச்சினைகளை தீர்க்க முடியாது என்றார்கள். இவ்வாறு கூறி, தற்போது 13 ஆண்டுகள் நிறைவுக்கு வந்துவிட்டன என்றும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## பீரிஸின் உருவ பொம்மை யாழில் எரிப்பு



■ எம்.றொசாந்த்

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸின் உருவ பொம்மையை எரித்து யாழ்ப்பாணத்திலுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகரின் அலுவலகத்திற்கு முன்பாக போராட்டம் இடம்பெற்றது.

அமைச்சர் பீரிஸ், ஐ.நா மனித உரிமை பேரவையில் தெரிவித்துள்ள கருத்துகளை கண்டித்து, கோஷங்களை எழுப்பியதுடன் அமைச்சரின் உருவப்படத்தை தீயிட்டுக் கொளுத்தினர். போராட்டத்தின் நிறைவில் மகஜரினை கையளித்தனர்.

## நடத்துநரை தாக்கி விட்டு 50,000 ரூபாய் பணம் கொள்ளை

■ செந்துரன் பிரதீபன்



ஆவரங்கால் பகுதியில் நேற்று முன்தினம் இரவு, பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்றுகொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் நடத்துனரை தாக்கி விட்டு 50,000 ரூபாய் பணம் கொள்ளையடிக்கப்பட்டு உள்ளது.

இளைஞர் ஒருவர், ஆவரங்கால் பகுதியில் இறங்க முற்பட்ட பொழுது நடத்துநரைத் தாக்கி, கையிலிருந்த பணத்தை அபகரித்துக் கொண்டு தப்பி சென்றுள்ளார்.

இதன்போது பலத்த காயங்களுக்கு உள்ளான பருத்தித்துறை, சக்கோட்டை பகுதியைச் சேர்ந்த நடத்துநர், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்து பொலிஸார் துரித நடவடிக்கைகளை எடுக்காத நிலையில், பருத்தித்துறை நோக்கிச் சென்ற பஸ், புத்தூர் பகுதியில் நிறுத்தப்பட்டுள்ளது.

## யாழில் குழப்ப நிலை

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில், கல்வியங்காட்டு சந்தை கட்டட தொகுதியுடன் காணப்படும் எரிபொருள் நிரப்பு நிலையத்தில், நேற்று (19) அதிகாலை முதல் பெற்றோலுக்காக சுமார் 3 கிலோ மீற்றருக்கும் அதிகமான நீண்ட வரிசையில் மக்கள் வாகனங்களுடன் காத்திருந்தனர்.

இந்த நிலையில் காத்திருந்த மக்களுக்கு எரிபொருளை வழங்காமல் க.பொ.த சாதாரண தர பரீட்சை வினாத்தாள்கள் திருத்தும் பணியில் ஈடுபட்டவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதால், அங்கு குழப்பம் ஏற்பட்டுள்ளது. அதனை அடுத்து, பொலிஸார், இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டதுடன், எரிபொருள் விநியோகம் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

பின்னர், மதியம் 2 மணிக்கு பின்னர் அதிகாரிகளுக்கு பிரத்தியேகமாக எரிபொருள் வழங்கப்பட்டது.

## எரிபொருள் பௌசரை வழிமறித்த வவுனியா மக்கள்

■ க. அகரன்



வவுனியாவில் ஏ9 வீதியில் பயணித்த எரிபொருள் பௌசர் ஒன்றினை முற்றுகையிட்டு நேற்றுக்காலை 6.30 மணியளவில் மக்கள் போராட்டம் மேற்கொண்டனர்.

வவுனியா பழைய பஸ் நிலையம் முன்பாக உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த நான்கு நாள்களாக மக்கள், நீண்ட வரிசையில் காத்திருந்தும் எரிபொருள் வரவில்லை.

இதனால் ஆத்திரமடைந்த மக்கள் ஏ9 வீதியில் பயணித்த எரிபொருள் பௌசர் ஒன்றை முற்றுகையிட்டனர்.

இதையடுத்து, 500 லீற்றரை வரிசையில் நிற்பவர்களுக்கு ஒருவருக்கு 500 ரூபாய் வீதம் வழங்குவதாகவும், விரைவில் பெற்றோல் வரும் எனவும் இராணுவ அதிகாரி, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரால் வழக்கப்பட்ட உறுதி மொழியை அடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் எரிபொருள் பௌசரை விடுவித்ததுடன், ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதியை விட்டு விலகிச் சென்றனர்.

## 32 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு





■ ரொசேரியன் லெம்பட்

தியாகிகள் தின 32 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று (19) ஞாயிற்றுக்கிழமை காலை மன்னாரில் நினைவு கூரப்பட்டுள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் மாவட்ட அமைப்பாளர், மன்னார் நகர சபை உறுப்பினருமான எஸ். ஆர். குமரேஸ் தலைமையில் கட்சியின் மன்னார் அலுவலகத்தில் நடைபெற்றது.

குறித்த நினைவேந்தல் நிகழ்வில், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஞா.குணசீலன், டெலோ பொறுப்பாளர் மோகன், கட்சியின் மத்திய குழு உறுப்பினர் ஏ. யூட் குரூஸ் ஆகியோர் விசேடமாக கலந்துகொண்டு, தியாகிகளின் உருவப் படத்திற்கு சுடரேற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இதன் போது கட்சியின் தோழர்கள், குடும்ப உறுப்பினர்களும் கலந்து கொண்டு அஞ்சலிகளை செலுத்தினர்.

# பதுக்கிய பொருட்கள் சிக்கின

■ எம்.எம்.அஹமட் அனாம்.





மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓட்டமாவடி, வாழைச்சேனை பிரதேசத்தில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரால் நேற்று (19) ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக மட்டக்களப்பு மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உதவிப்பணிப்பாளர் ஆர்.எப். அன்வர் சதாத் தெரிவித்தார்.

சோதனை நடவடிக்கையானது மட்டக்களப்பு பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் ஆர்.எப்.அன்வர் சதாத் தலைமையில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் சகிதம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய ஓட்டமாவடி, வாழைச்சேனை பிரதேசத்தை அண்டிய பகுதிகளிலுள்ள வியாபார நிலையங்களில் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில் அரிசியை கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்த விற்பனை நிலையங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், குறித்த விற்பனை நிலையங்களில் கட்டுப்பாட்டு விலைக்கு அரிசியை விற்பனை செய்வதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

அத்தோடு ஹாட்வெயார் ஒன்றில் விலையை அழித்து விற்பனை செய்தமை தொடர்பில் உடமைகள் பறிமுதல் செய்யப்பட்டதுடன், விற்பனை நிலையங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், சில்லறை வியாபார நிலையமொன்றில் பழைய விலையில் பதுக்கி வைக்கப்பட்ட பால்மாக்கள் பறிமுதல் செய்யப்பட்டு, பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக வியாபார நிலையங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகள் நடைபெறுவதுடன், அரிசியை கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்வதையும், பொருட்களை பதுக்கி வைத்து விற்பனை செய்பவர்களையும் பிடித்து சட்ட நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக மட்டக்களப்பு மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உதவிப்பணிப்பாளர் ஆர்.எப். அன்வர் சதாத் தெரிவித்தார்.

## கல்முனை பிராந்தியத்தில் கடற்றொழில் பாரிய வீழ்ச்சி

■ அஸ்லம் எஸ்.மௌலானா



எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கல்முனை பிராந்தியத்தில் கடற்றொழில் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதைக் கவனத்தில் கொண்டு, இப்பகுதி கடற்றொழிலாளர்கள் இலகுவான முறையில் எரிபொருட்களை பெற்றுக்கொள்வதற்கு விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாளிகைக்காடு கிழக்கு அமைப்பாளர் எம்.எச். நாஸர், ஞாயிற்றுக்கிழமை (19) வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களிடம் அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

## புதிய நடைமுறையில் எரிபொருள்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்



மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டு நிலையை கருத்திற்கொண்டு, மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட எரிபொருள் பாவனையாளர்களுக்கு புதிய நடைமுறையில் எரிபொருளை வழங்குவதற்கு பெற்றோலிய கூட்டுத்தாபனம், எரிபொருள் நிலைய உரிமையாளர்களுடனான விசேட கலந்துரையாடலின் போது தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்தவகையில் மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பிரதேச மக்களுக்கு இன்று (20) திங்கட்கிழமை முதல் இலகுவான முறையில் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு கிராம சேவையாளரால், அட்டவணைப்படுத்தப்பட்ட அட்டை முறையில் எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் வழங்குவது தொடர்பாக பெற்றோலிய கூட்டுத்தாபனம், எரிபொருள் நிலைய உரிமையாளர்களுடான கலந்துரையாடல் பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் தலைமையில் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

## தந்தையும் மகனும் படுகாயம்

■ எச்.எம்.எம்.பர்ஸான்

தந்தையும் மகனும் தாக்குதலுக்குள்ளான நிலையில், வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வைத்தே இந்தத் தாக்குதல் சம்பவம் சனிக்கிழமை (18) இடம்பெற்றுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு

## பாதணிகள் வழங்கி வைப்பு





■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பாலமுனை பிரதேசத்தில் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை (18) மாலை பாலமுனை அலிகார் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

மண்முனைப் பற்று பிரதேச சபை உறுப்பினர் எம்.ஏ.எம். சியாதின் முயற்சியால், பாலமுனை உதவும் கரங்கள் அமைப்பால் 100 மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 15 மாணவர்களுக்கு இந்தப் பாதணிகள் வழங்கப்பட்டன.

## எரிபொருள் வழங்குமாறு ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்







■ வா.கிருஸ்ணா

எரிபொருள் வழங்குமாறு கோரி மட்டக்களப்பு மாவட்டத்தில் கா.பொ.த சாதாரண தர பரீட்சை விடைத்தாள்களை மதிப்பிடும் பணிகளில் ஈடுபட்டிருந்த ஆசிரியர்கள் முன்னெடுத்த பணி பகிஸ்கரிப்பு, ஆர்ப்பாட்டம் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் வழங்கிய உறுதிமொழிகளையடுத்து கைவிடப்பட்டது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரிக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்ட பேரணியானது நேற்று காலை (19) ஆரம்பமானது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் பொன்னுத்துரை உதயரூபன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், க.பொ.த சாதாரண பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீட்டு பணியில் ஈடுபட்ட சுமார் 1,200 ஆசிரியர்கள் கலந்துகொண்டார்கள்.

'பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் பணிப்புரையை நடைமுறைப்படுத்தி, பரீட்சை மதிப்பீட்டு பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்களின் மனநிலையை குழப்பி, கல்வியை சீரழிக்காதே, பரீட்சை மதிப்பீட்டாளர்களுக்கு உடன் எரிபொருள் வழங்கு' என சுலோக அட்டையை ஏந்தியவாறு ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள்.

ஹட்டன் கல்வி வலய பாடசாலைகள்

# இன்று வழமைபோல் இயங்கும்

எம்.கிருஸ்ணா

ஹட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகள் வழமைப்போல இன்று, இயங்கும் என வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி சத்தியேந்திரா தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் இன்று 20ஆம் திகதி திங்கட்கிழமை பாடசாலைகளுக்கு சமூகமளிக்க வேண்டுமா, இல்லையா என்பது தொடர்பில், அரசாங்கம் அறிவிப்பொன்று விடுத்துள்ள நிலையில், ஹட்டன் கல்வி வலய பாடசாலைகளின் செயற்பாடு எத்தகையதானது என வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

எரிபொருள் தட்டுப்பாட்டால் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெருக்கடியால் பாடசாலை கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில், அரசாங்கம் சில நடைமுறைகளை விதித்துள்ளது.

குறிப்பாக, நகர்ப்புற பாடசாலைகளை மூடுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை வினாத்தாள் திருத்தப்பணிகள் இடம்பெறும் ஹட்டன் நகர பாடசாலைகளான ஹைலன்ஸ் கல்லூரி, சென். பொஸ்கோ கல்லூரி ஆகியன மூடப்பட்டுள்ளன.

இந்நிலையில், குறித்த வலயத்துக்கு உட்பட்ட ஏனைய பாடசாலைகளின் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்களும் கற்கக் கூடிய மாணவர்களும் பாடசாலைக்கு சமூகமளித்து கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுமாறு அறிவித்துள்ளோம்.

வருகை தர சிரமமாக உள்ள மாணவர்களுக்கு இணையவழியின் ஊடாக, குறித்த பாடநெறிகளை நடத்துவதற்கும் அறிவுறுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஹைபிரிட் முறையிலேயே நாளைய கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.







## ஆர்ப்பாட்டம்...

எரிபொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கு விசேட ஏற்பாடுகளை தங்களுக்கு செய்துதருமாறு வலியுறுத்தி, ஹட்டனிலுள்ள க.பொ.த சா/த விடைத்தாள்களை மதிப்பிடும் பணிகளில் ஈடுபட்டிருக்கும் அதிபர், ஆசிரியர்கள், மத்திய நிலையங்களுக்கு முன்பாக, நேற்று (19) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



## தோட்ட மக்களுக்கு சமைத்த உணவு

சுஜிதா

சர்வதேச தந்தையர் தினத்தையொட்டி, அரச சார்பற்ற நிறுவனத்தின் அனுசரணையுடன் நேற்றைய தினம் (19) தலவாக்கலை, ரட்ணகிரி, பாமஸ்டன் பகுதியில் வசிக்கும் சகல குடும்பங்களுக்கும் காலை, இரவு இருவேளைகளும் சமைத்த உணவு வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

நண்பன் பவுண்டேஷன், லங்கா ஆக்சன் விஷன் பவுண்டேசன் ஆகிய அரச சார்பற்ற அமைப்புகளின் அனுசரணையுடன், இந்த உணவு வழங்கும் வேலைத்திட்டம் ஒரு மாதத்திற்கு முன்னெடுக்கப்படும் என அதன் நிர்வாக இயக்குநர்கள் தெரிவித்தனர்.

இந்த நிறுவனங்களால் முன்னெடுக்கப்படும் சமைத்த உணவு வழங்கும் திட்டத்தில் அதிகமான தோட்ட மக்கள் பயனடைய உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நானுஓயா சிறுவன் நீர்கொழும்பில்

டி.சந்ரு



நானுஓயா, டெஸ்போட்டில் காணாமல் போன சிறுவன், நீர்கொழும்பு ரயில் நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்டார்.

இந்த மாதம் 17ஆம் திகதி காலை, 9 மணியளவில் காணாமல்போன 12 வயதுடைய மகேந்திரன் ஆசான் என்ற சிறுவன், அன்றைய தினம் இரவே, நீர்கொழும்பு ரயில் நிலையத்தில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டார் என, நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்தனர்

குறித்த சிறுவனை அயல் வீட்டில் உள்ள நபர், தொழில்பெற்று தருவதாகவும் அதற்காக, வீட்டிலிருந்து, 13,000 ரூபாய் பணம் எடுத்து வருமாறும் கூறியுள்ளார்.

இதற்கமைய, சிறுவனிடம் இருந்து பத்தாயிரம் ரூபாய் பணத்தை பெற்றுக் கொண்டு, சிறுவனை நானுஓயா ரயில் நிலையத்துக்கு அழைத்துச் சென்று, அங்கிருந்து நீர்கொழும்புக்கு அனுப்பியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

குறித்த சிறுவனை நீர்கொழும்பு ரயில் நிலையத்தில் இனங்கண்ட உறவினர் ஒருவரே, சிறுவனை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

குத்தகை நிறுவனத்தின் அஜாக்கிரதையால்

## அப்பாவி வியாபாரி மரணம்

சேஹ்ன் செனவிரத்ன

> அதிகாலை இரண்டு மணியளவில், தமது ட்ரக் வண்டியை எடுத்துச் செல்வதை கண்ட அவர், பின்னால் ஓடிச் சென்று அதனைத் தடுத்த போது, தவறி ட்ரக் வண்டிக்குள் விழுந்து உயிரிழந்துள்ளார்

குத்தகை நிறுவனம் ஒன்றிடமிருந்து பெற்றுக்கொண்ட ட்ரக் வாகனத்துக்கு உரிய முறையில் குத்தகை செலுத்தாமை காரணமாக, அதனை மீண்டும் கொண்டு செல்ல வந்த குத்தகை நிறுவன கையாட்களிடமிருந்து அதனை மீட்க போராடிய வியாபாரி ஒருவர், அந்த வண்டியில் சிக்கி உயிரிழந்த சம்பவம் வத்தேகம பகுதியில் பதிவாகியுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் பொல்கொல்ல, மிகமனவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதானவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர், தமது வீட்டில் சீமெந்து கல் தயாரிக்கும் வர்த்தகத்தை முன்னெடுத்து வந்ததுடன், கண்டி நகரிலுள்ள குத்தகை நிறுவனம் ஒன்றிலிருந்து ட்ரக் வண்டியொன்றையும் பெற்றுள்ளார்.

கொரோனா தொற்று பரவலால், குறித்த வண்டிக்கான குத்தகையை செலுத்த முடியாமல் போனதால், குத்தகை நிறுவன உரிமையாளருக்கும் இந்த வியாபாரிக்குமிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டு வந்துள்ளன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் (18) அதிகாலை இரண்டு மணியளவில், தமது வீட்டுக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ட்ரக் வண்டியை யாரோ திருடுவது போன்று சத்தம் கேட்டுள்ளது.

இதையடுத்து சிலர் தமது ட்ரக் வண்டியை எடுத்துச் செல்வதை கண்ட அவர், பின்னால் ஓடிச் சென்று அதனைத் தடுத்த போது, தவறி ட்ரக் வண்டிக்குள் விழுந்து காயமடைந்து கட்டுகஸ்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்தையடுத்து, குத்தகை நிறுவன உரிமையாளர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், டரக் வண்டியை கடத்துவதற்கு வந்த நபர்களையும் அந்த ட்ரக் வண்டியையும் தேடி வருவதாக வத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் இ.போ.ச பஸ் டிப்போவில்

## 50 இலட்சம் ரூபாய்க்கு பருவகால சீட்டுகள் விநியோகம்

ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் இ.போ.ச பஸ் டிப்போவால் இம்முறை 50 இலட்சம் ரூபாய்க்கு மாதாந்த பருவச்சீட்டு விநியோகிக்கப்பட்டுள்ளதாக டிப்போ முகாமையாளர் டபிள்யு.ஜி.ஜே.கே. கீர்த்திரத்ன தெரிவித்துள்ளார்.

ஹட்டன் டிப்போவால் மாதாந்த பருவச்சீட்டு 18- 19 இலட்சம் ரூபாய் வரையே இதுவரை காலங்களும் விநியோகிக்கப்பட்டதாகவும் எனினும் மே மாதம் 33 இலட்சம் ரூபாய் வரை இது அதிகரித்திருந்ததுடன் தற்போது 50 இலட்ச ரூபாயை நெருங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் பிரச்சினையால் தனியார் பஸ்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி, உரிய நேரத்துக்கு தனியார் பஸ் கிடைக்காமை காரணமாக, இ.போ.ச பஸ்கள் மூலம் மாணவர்களின் பயணத்துக்காகவும் சாதாரணமாக அலுவலகம் செல்லும் பிரயாணிகளுக்காகவும் இவ்வாறு பருவச்சீட்டு விநியோகிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஹட்டன் டிப்போ மூலம் நாளொன்றுக்கு 80 பஸ்கள் குறுகிய நெடுந்தூர சேவைகளில் ஈடுபடுவதாகவும் தெரிவித்த அவர், தற்போது பஸ்களுக்கான பணியாளர்கள் பஸ் டயர்களுக்கான பற்றாக்குறை காணப்பட்டாலும் பருவச்சீட்டுகளை பெற்றுக்கொண்டுள்ள மாணவர்கள், பயணிகளுக்காக உரிய முறையில் பஸ் சேவையை முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மின்சாரப் பட்டியல்களை

## வீதியில் வீசியவருக்கு அபராதம்

ரஞ்சித் ராஜபக்ஷ

மின்சாரப் பட்டியல்களை வீதியில் வீசியமை தொடர்பில், ஹட்டன்-டிக்கோயா நகர சபையினரால் வழக்குத் தொடரப்பட்ட நபரிடமிருந்து அபராதத் தொகை அறிவிடப்பட்டுள்ளது.

ஹட்டன்- நீதவான் நீதிமன்றில் சந்தேகநபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதால், அவரை பத்தாயிரம் ரூபாய் அபராதத் தொகையை செலுத்துமாறு, ஹட்டன் நீதவான் பருக்டீன் உத்தரவிட்டுள்ளார்.

ஹட்டன்- ஹிஜிராபுர பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரிடமே இந்த அபராதத் தொகை அறவிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர், ஹட்டன் நகரிலுள்ள குறுக்கு வீதியொன்றில், தனது வீட்டின் மின்சாரப் பட்டியல்களை வீசியிருந்தாகவும், இது தொடர்பில் ஹட்டன்-டிக்கோயா நகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் ஆர்.ஆர்.எஸ்.மெதவலவால் சந்தேகநபருக்கு எதிராக ஹட்டன் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கரும்புக்காக வழங்கப்பட்ட

## கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டது

சுமணசிறி குணதிலக

இலங்கை சீனி நிறுவனத்துக்குரிய பெல்வத்த சீனி தொழிற்சாலைக்கு, விநியோகிக்கும் ஒரு தொன் கரும்புக்காக இதுவரை வழங்கப்பட்டு வந்த 7,500 ரூபாய் 8,000 ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

தற்போது குறித்த சீனி நிறுவனத்தில் ஒரு கிலோ கிராம் சீனி 306 ரூபாய்க்கு விநியோகிக்கப்படுவதுடன், 1 லீற்றர் ஸ்பிரிட் 1,000 ரூபாய் விநியோகிக்கப்படுகின்றது.

அத்துடன் குறித்த நிறுவனம் தற்போது அதிக இலாபத்துடன் தொழிற்படுகின்றமை தொடர்பில், பெல்வத்த கரும்பு விவசாய சங்கத்தின் செயலாளர் ஆர்.எம். விக்கிரமசிங்கவிடம் வினவியபோது, "நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக கரும்பு விவசாயிகள் எரிபொருள் மற்றும் ஏனைய செலவுகளுக்காக பாரிய நிதியை செலவிடுகின்றனர்.

இந்த நிலையிலேயே பெல்வத்த சீனி தொழிற்சாலையில் சீனி, ஸ்பிரிட் உற்பத்தி 300 சதவீதம் அதிகரித்துள்ளதுடன் நிறுவனத்தின் இலாபமும் அதிகரித்துள்ளது என்றார்.






## இரத்ததான முகாம்...

பதுளை உஸ்கோட் நிறுவனம், மாகாண வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள் இரத்ததான முகாமொன்று நேற்றைய (19) தினம் நடத்தப்பட்டது. தியத்தலாவை இராணுவ முகாம், பிராந்திய பொலிஸ் தலைமையகம் இணைந்து, தலசீமியா (Thalassemia) நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவும் வகையில் இந்த இரத்ததான முகாம் நடத்தப்பட்டது. (படங்கள்: இரா சுரேஷ்குமார்)



## மரை இறைச்சியுடன் இருவர் கைது

ரஞ்சித் ராஜபக்ஷ

தேயிலைத் தோட்டமொன்றில் சுற்றித் திரிந்த மரையொன்றை கொன்று, இறைச்சியாக்கிய இருவர் பொகவந்தலாவை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரிட்வெல் தோட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், அந்தத் தோட்டத்தின் தேயிலை மலைகளில் சுற்றித் திரிந்த மரையையே பொறி வைத்து பிடித்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பொகவந்தலாவை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய சந்தேகநபர் ஒருவரின் வீட்டை சோதனையிட்ட போது, அங்கிருந்து 12 கிலோ கிராம் மரை இறைச்சி கைப்பற்றப்பட்டது. மேலும் சந்தேகநபர்களை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# கடுமையாகப் பொறுமை காப்பதே காலத்தின் தேவையாகும்

உத்தியோகபூர்வமான அறிவிப்பு வெளியிடப்படாவிடினும், நாட்டில் ஊரடங்கு அல்லது பொதுமுடக்கமே அமலில் இருக்கின்றது. அந்தளவுக்கு எரிபொருள் நெருக்கடி தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கின்றது. ஒவ்வோர் எரிபொருள் நிரம்பும் நிலையங்களின் இருமருங்குகளிலும் வாகனங்களின் வரிசைகள் நீண்டுக்கொண்டே செல்கின்றன.

சில எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் நீண்ட நாள்களாக 'இல்லை' என்ற அறிவிப்பு பலகையே தொங்கவிடப்பட்டுள்ளது. எனினும், என்றைக்காவது கிடைக்கும் எனும் நம்பிக்கையில், சாரதிகள் காத்துக்கிடக்கின்றனர். அக்கம் பக்கத்தில் இருக்கும் சின்ன,சின்ன கடைகளும் இழுத்துப் பூட்டப்பட்டுள்ளன. சிலர் மனிதாபிமான அடிப்படையில் ஏதாவது தாகசாந்தி வழங்கிக்கொண்டிருக்கின்றனர். இருப்பதில் கொஞ்சத்தையேனும் தானமாக வழங்கும் பரோபகாரிகளை வாழ்த்தாமல் இருக்கக்கூடாது. எனினும், சுரண்டுபவர்களும் மோசடிக்காரர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு செல்லும் வழியிலேயே, இரண்டொரு கேன்களில் எரிபொருள் நிரப்பப்பட்ட காணொளி சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது. தனது வைத்தியர் தொழிலையே கொச்சப்படுத்தும் வகையில், நடந்துகொண்டமைதான் வெட்கக்கேடான விடயமாகும்.

நெருக்கடி, சகலருக்கும் பொதுவானது. ஆகையால் சமூகத்தில் அந்தஸ்துள்ளவர்கள், தங்களுடைய தொழில்தர்மத்துக்கு தீங்கிழைத்துவிடாது, சகலருக்கும் முன்மாதிரியாக நடந்துகொள்ளவேண்டும்.

வரிசையில் நிற்பவர்களின் ஆதங்கம் சொல்லில் அடங்காது. எனினும், பலரும் பொறுமையுடன் இருக்கின்றனர். அந்தப் பொறுமையை சோதித்துப் பார்க்கக்கூடாது. எதிர்வரும் மூன்று நாள்கள், தீர்மானம்மிக்கதாய் இருக்கும். ஏனெனில், 23 ஆம் திகதிக்குப் பின்னரே எரிபொருள் விநியோகிக்கப்படுமென உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டு உள்ளது.

ஆகையால், எரிபொருள் வரிசையில் நிற்போர், இன்னுமின்னும் பொறுமையை கடைப்பிடிக்கவேண்டும். சமைக்கும் போது, ஏதாவது பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுமாயின், பக்கத்து வீடுகளில் கடன்வாங்குவதைப் போல, ஓரிரு எரிபொருள் கப்பலுக்கு பணத்தைச் செலுத்திவிட்டு, அதனை விநியோகித்துவிட்டு, மறுகப்பலுக்காக காத்திருக்காமல் முறையான வேலைத்திட்டமொன்றை அவசரமாக தயாரித்து அமல்படுத்தவேண்டும்.

போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகின்றது. வருமானமின்றி பலரும் வாடிக்கொண்டிருக்கின்றனர்.

ஆகையால், இருப்பதை வைத்து சமாளிப்பதற்குக் கூட மக்கள் திணறிக்கொண்டிருக்கின்றனர். பட்டினிச்சாவை எதிர்நோக்க வேண்டிய துர்ப்பாக்கியமே நாட்டுக்கு ஏற்பட்டுள்ளது. சிலர் ஏன்? மரணமடைந்தனர் என்பது கூட தெரியாமலே இருக்கின்றது. போஷாக்கான சாப்பாடு கிடைக்காமையால், தெம்பு இல்லாதவர்களாக பலரும் இருக்கின்றனர்.

இதற்கிடையே, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோர் மீது ஆகக் குறைந்த அதிகாரத்தை பயன்படுத்துமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அரச சொத்துகளுக்கு சேதம் விளைவிக்காத வகையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் நடந்து கொள்ளவேண்டும். மக்கள் குமுறிக்கொண்டிருக்கின்றனர் என்பதால், பொலிஸாரும் இன்னுமின்னும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு

எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# நாட்டைக் காப்பாற்ற இரட்சகர்களைத் தேடுதல்



என்.கே. அஷோக்பரன்

Twitter: @nkashokbharan

இலங்கை தீவு மிகப்பாரதூரமான பொருளாதார வீழ்ச்சியை சந்தித்து நிற்கிறது. இதனை நெருக்கடி நிலை என்று விளிப்பது, அதன் பாரதூரத்தன்மையை குறைத்துக் குறிப்பிடுவதாகவே அமையும். நிலைமை அவ்வளவு மோசமாகவுள்ளது.

எரிபொருளுக்கு வரிசை, எரிவாயுவுக்கு வரிசை, உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு, மருந்துகளுக்கு தட்டுப்பாடு, உணவு, மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் அபார விலையேற்றம் என, ஒட்டுமொத்த இலங்கையரும் தப்பிப்பிழைக்கவே தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையர்கள் அனைவரும் எல்லா இடங்களிலும் இந்த நெருக்கடியின் தாக்கங்களை உணர்கிறார்கள். மளிகைக் கடைகளில், எரிபொருள் நிலையங்களில் உள்ள வரிசைகளிலும், வீட்டிலும் என எல்லா இடங்களிலும் விலையேற்றம், தட்டுப்பாடு ஆகிய இரண்டையும் மக்கள் எதிர்கொள்கிறார்கள்.

இலங்கை ரூபாயின் பெறுமதி, இப்போது கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது, இதனால் வாழ்க்கைச் செலவு மிகவும் தீவிரமடைந்துள்ளது. இதன் விளைவாக, அதிகமான மக்கள் அத்தியாவசிய பொருட்கள், சேவைகளை வாங்கவோ அல்லது, அணுகவோ முடியாது திக்கித்திணறி நிற்கிறார்கள்.

இரசாயன உரத்தை தடைசெய்கிறோம் என கோட்டாபய ராஜபக்‌ஷ, இரவோடிரவாக எடுத்த அடிமுட்டாள்தனமான முடிவின் விளைவால், தற்போது இலங்கை இன்னும் சில மாதங்களில் உணவுப்பஞ்சத்தை எதிர்நோக்கலாம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆரூடம் சொல்லி வருகிறார்.

எப்படியாவது பதவியில், தான் தொடரவேண்டும் என்ற கோட்டாபயவின் சுயநலத்துக்கு, முழுநாடும் பலிக்கடாவாகிக் கொண்டிருக்கிறது. இரண்டு வாரங்களுக்கு முன்னர் கோட்டாபய ராஜபக்‌ஷ, அமெரிக்காவின் 'ப்ளூம்பேர்க்' செய்திச் சேவைக்கு அளித்த செவ்வியில், "எனக்கு மக்கள், ஐந்து வருடங்களுக்கான மக்களாணை வழங்கியிருக்கிறார்கள். நான் ஒரு தோல்வி கண்ட ஜனாதிபதியாக போக முடியாது" என்று தெரிவித்திருந்தார்.

கோட்டாபய, உண்மையைப் பேசியிருக்கிறார். அவருக்கு நாடு பற்றி, மக்கள் படும் துன்பம் பற்றி எல்லாம் அக்கறை இல்லை. அவருடைய கவலை, தான் ஒரு தோல்வி கண்ட ஜனாதிபதியாக, வரலாற்றில் இடம்பெற்றுவிடக் கூடாது என்பதுதான். அவருடைய கவலை அதுமட்டும்தான்.

ஆனால், அவர் சொல்வதில் ஒரு விஷயம் இருக்கிறது. சரியோ, பிழையோ 69 இலட்சத்துக்கு மேற்பட்ட இலங்கையர்கள், கோட்டாவுக்கு வாக்களித்து, அவரை அடுத்த ஐந்து வருடங்களுக்கு ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தார்கள். மைத்திரிபாலவின் ஆட்சியில் அதிருப்தி அடைந்த மக்கள், 'நாட்டைக் காப்பாற்றும் வீரன் கோட்டாவே' என்று எண்ணி, ஜனாதிபதியாக்கினார்கள்.

தன்னை 'ஸ்ரிக்ட் ஒஃபிஸர்' எனக் காட்டிக்கொண்ட கோட்டா, நிபுணர்களைக் கொண்ட ஆட்சியின் மூலம், இலங்கையை தன்னிறைவு கண்ட நாடாக்கிவிடுவார் என்று பகற்கனவு கண்டுகொண்டு, சர்வதேச அளவில் யுத்தக்குற்றம், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டுள்ள கோட்டாபயவை பெரும்பான்மையினம் ஜனாதிபதியாக்கியது.

ஆனால் இதன் விளைவு, இந்தியாவும் ஏனைய உலகநாடுகளும் இலங்கைக்கு வழங்கும் கடனையும் உதவிகளையும் நிறுத்திவிட்டால், எரிபொருளின்றி, போதியளவு உணவு, மருத்துவம், மின்சாரமின்றி இலங்கை பஞ்சத்திலும் வறுமையிலும் உழலும் மிக மோசமான நாடாகிவிடும். இலங்கையை இந்த நிலைக்குக் கொண்டுவந்து விட்டதுதான் கோட்டாபயவினதும், ராஜபக்‌ஷர்களினதும் சாதனை!

ஆனால், பிழை அவர்களுடையது மட்டுமல்ல. அவர்களைத் தேர்தலில் வாக்களித்து, தேர்ந்தெடுத்து, 'நாட்டைக் காப்பாற்றும் இரட்சகர்கள்' போல அவர்களை வர்ணித்து, அதிகாரத்துக்குக் கொண்டுவந்தவர்கள் இந்நாட்டின் பெரும்பான்மையின மக்கள். இன்றும் கூட, இலங்கை மக்களில் கணிசமானோர், தற்போது தம்மை இந்த இன்னல் நிலையிலிருந்து காப்பாற்ற, ஒரு இரட்சகரை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார்கள் என்றால் அது மிகையல்ல; இதுதான் இந்நாட்டின் சாபக்கேடு.

ஒரு ஜனநாயக நாட்டில், மாற்றங்கள் விளைய வேண்டுமானால், அந்நாட்டின் அரசாங்கம் உள்ளிட்ட அனைத்து படிநிலைகளிலும் கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். ஆனால், இங்கு யாரும் கட்டமைப்பு மாற்றம் பற்றி யோசிப்பதில்லை. தென்னிந்திய திரைப்படங்களில் வருவதுபோல, ஒரு நாயகன் உதயமாகி, ஏழையை, பணக்காரனாக மாற்றுவதைப் போல, யாராவது துன்பத்தில் உழலும் இலங்கையை ஒரேயடியாக மாற்றிவிட மாட்டார்களா என இரட்சர்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

இன்றும், கோட்டாவை வீட்டிற்குப் போக வேண்டினாலும், அடுத்தது என்ன என்ற திட்டம், இலங்கை மக்களில் கணிசமானோர் மனதில் இல்லை. நாளை இன்னொருவன் வந்து தன்னை வீரன் என்று ஊடகங்களின் ஆதரவுடன் முன்னிறுத்தினால், அந்தப் பிரசாரத்தில் மயங்கி, மக்களில் கணிசமானோர் அந்த 'புதிய வீரன்', தம்மை இரட்சித்துக் காப்பான் என்று நம்பி அவனுக்கு வாக்களிப்பார்கள். அவன் ஏமாற்றியதும், இன்னொரு இரட்சகனுக்கான தேடும்படலம்; ஆக கட்டமைப்பு மாறவில்லை. இரட்சகர்களுக்கான தேடல் மட்டும் தொடர்கிறது.

உண்மையில், வளர்ச்சி, அபிவிருத்தி என்பவை மிக நீண்டகால கட்டமைப்பு மாற்றத்தின் மூலமே சாத்தியப்படும். அது, இலகுவான பயணமாக இருக்காது. கட்டமைப்பு மாற்றம், தனிமனித வாழ்வில் நிறையத் தாக்கங்களை ஏற்படுத்தும். இதற்கு மக்கள் தயாரில்லை என்பதுதான், மக்கள் கட்டமைப்பு மாற்றத்தை விரும்பாது, இரட்சகன் ஒருவனை வேண்டி நிற்பதற்கான மூல காரணம்.

மக்களில் கணிசமானோர் தமது வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை. அதிகம் பேருக்கும் கொஞ்ச எரிபொருளாவது கிடைக்க வேண்டும் என, ஒரு பங்கீட்டு முறையை அரசாங்கம் அறிமுகப்படுத்தி, ஒரு வாகனத்திற்கு ரூ.10,000 தான் எரிபொருள் நிரப்ப முடியும் என்று கட்டுப்பாடு விதித்தால், எரிபொருள் நிரப்புனருடன் பேசி, அவருக்கு ரூ.1,000 இலஞ்சம் வழங்கி, கட்டுப்பாட்டு அளவிற்கு மேலாகத் தமது வாகனத்தின் தாங்கியை நிரப்பிக்கொள்வோர் பலர் இருக்கிறார்கள்.

மக்கள் எரிவாயுவிற்காக நாட்கணக்காக வரிசையில் காத்திருக்கும் போது, எரிவாயுக் கடைக்காரருக்கு இலஞ்சம் கொடுத்து, கடையின் பின்கதவால் எரிவாயு பெற்றுக்கொள்வோர் இருக்கிறார்கள். இதைச் செய்பவர்கள் எல்லாம் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் மட்டுமல்ல. ஆகவே இங்கு பலரும் தாம் எதையும் விட்டுக்கொடுக்கத் தயராகவில்லை. தமது வாழ்க்கை முறையை கொஞ்சம் கூட மாற்றியமைக்கத் தயாராகவில்லை.


ஆகவே, அவர்களுக்கு கட்டமைப்பை மாற்றுவதைப் பற்றி அக்கறையில்லை. தாம் நிகழ்காலத்தில் பிரச்சினையில்லாமல், நோகாமல், தாம் எப்படி வாழ்ந்தோமோ அப்படியே வாழ வேண்டும். அதற்கு வழிசமைக்கிற ஒரு இரட்சகன் வரவேண்டும். அவனை ஆதரிப்போம் என்பதுதான் இங்கு பலரின் மனநிலை.

இதனால்தான் மாறி மாறி இரட்சகர்களுக்கு வாக்களித்துக்கொண்டு இருக்கிறார்கள் மக்கள். இங்கு கட்டமைப்பை மாற்றவேண்டுமென உண்மையாக விரும்புகிறவர்களுக்கு மதிப்புமில்லை; ஆதரவுமில்லை. குறைந்த வரி, ஆனால் அரசாங்கம் நிறைந்த மானியங்களையும் உதவிகளையும் வழங்கவேண்டும் என்று நினைக்கும் மக்கள் இங்கு ஏராளம்.

அந்த மக்கள் பதவிக்குக் கொண்டு வந்த நாயகனான கோட்டாபய, அந்த மக்களின் கனவை நனவாக்கியதன் விளைவைத்தான் இன்று நாம் அனைவரும் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். நான் மட்டும் வாழ்ந்தால் போதும், மற்றவன் எக்கேடுகெட்டாலென்ன என்று நினைத்த இலங்கையின் பெரும்பான்மையினம், ஒரு வெளிப்படையான இனவாதிக்கு வாக்களித்தது. அவன் பதவிக்கு வந்தால், சிறுபான்மையினர் துன்பத்திற்காளாவர்களே, அரச படைகளால், பொலிஸாரால் அடக்குமுறைக்காளாவார்களே என்றெல்லாம் வாக்களித்த அந்த பெரும்பான்மை யோசிக்கவில்லை.

பதவிக்கு கொண்டு வந்த இரட்சகன் முன்பு, சிறுபான்மையினரிடம் மட்டும் காட்டிய வன்முறைவெறியை, இன்று பெரும்பான்மையினருக்கு எதிராகவும் காட்டத் தொடங்கியது கண்டு அவருக்கு வாக்களித்தவர்கள் அதிர்ச்சியில் இருக்கிறார்கள்.

தாம் வெறுக்கும் இந்த முன்னாள் இரட்சகனை விரட்டிவிட்டு, தமக்கு சொகுசான வாழ்க்கையை அளிக்கக்கூடிய இன்னோர் இரட்சகனைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த இரட்சகனுக்காக தேடல் நிற்கும் வரை, கட்டமைப்பு மாற வேண்டும் என்று மக்கள் உணரும் வரை, அதற்காக விட்டுக்கொடுப்புகளுக்கு தயாராகும் வரை, இங்கு எதுவும் மாறப்போவதில்லை என்பதுதான் யதார்த்தம்.



## வாழ்வியல் தரிசனம்

"உனது காதல் எந்த அளவில் உள்ளது?" என, தங்கள் நண்பர்களிடம் கேட்பதுண்டு. காதலுக்கு என்ன நீளம், அகலம் என்று கேட்பது தவறு. பொதுவாக சிலர் காதல் வளர்ச்சி பற்றி, பலவித வடிவத்துடன் அலசிக் கொள்வதுண்டு.

காதல் ஜோடிகளிலும் பலவகை ரகங்கள் உண்டு. படுவேகமாகக் காதலிப்பர். அதே வேகத்துடன் நழுவி, வேறு ஒருவரைத் திருமணம் செய்வார்கள். எனினும் விரும்பி திருமணம் செய்பவர்களில் பெரும்பாலானவர்கள், கொஞ்ச நாள்களில் விலகி, திருமண பந்தத்தை விலக்கிக் கொள்கிறார்கள்.

காதல் தோல்வியால் மனம் உடைந்து, சோகமான முடிவுகளை எடுக்கும் நபர்கள் பரிதாபத்துக்கு உரியவர்கள். தங்களையும் வருத்தி, தங்கள் நண்பர்கள், உறவினர்களையும் வருந்த வைப்பது தகாது.

அன்புடன் வாழும் எவருமே, ஒருவரை ஒருவர் ஏமாற்ற மாட்டார்கள். பெண்களுக்கும் ஆண்களுக்கும் உரிமை ஒன்றுதான். ஒருவரை ஏமாற்றுவது கூட, தன்னைத்தான் ஏமாற்றுவது போல் அமைந்துவிடுகின்றது.

ஆனால், ஆண்களில் பெரும்பான்மையினர், இன்னமும் பழைய காலத்திலேயே அமிழ்ந்து கிடக்கிறார்கள். நல்ல காதல் வரவேற்கத்தக்கது.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

திருகோணமலை மாவட்ட

### மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

திருகோணமலை மாவட்ட மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிதாக பாதிப்படைந்துள்ளது. எரிபொருள் தட்டுப்பாட்டால் கடலுக்கு தொழிலுக்குச் செல்வதில் மீனவர்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இம்மாவட்டத்தின் திருக்கடலூர், புல்மோட்டை, நிலாவெளி, ஜமாலியா போன்ற பிரதேசங்களில் உள்ள மீனவர்களின் படகுகள், வள்ளங்கள் கரையோரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

மீனவர்கள், நீண்ட வரிசைகளில் எரிபொருளுக்காக காத்திருந்தாலும் எரிபொருளை பெற்றுக்கொள்வதில் சிரமமாக உள்ளது. இதனால் மீனவர்களின் கடற்றொழில் வாழ்வாதாரம் பாதிப்படைந்துள்ளது.

மீனவர்களுக்கு எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக, மீன்பிடி திணைக்களம் இலகுவான வழிமுறைகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

எப். முபாரக்





# SLT-MOBITEL இன் 5G பரீட்சார்த்த வலையமைப்பு விஸ்தரிப்பு

நவீன மொபைல் தொழில்நுட்ப தீர்வுகளை இலங்கையில் அறிமுகம் செய்வதில் தனது தலைமைத்துவத்தை உறுதி செய்யும் வகையில், தேசிய தொலைத் தொடர்பாடல் தீர்வுகள் வழங்குநரான SLT-MOBITEL, தனது 5G வணிக அறிமுகத்துக்கு முன்னரான பரீட்சார்த்த வலையமைப்பு விஸ்தரிப்பு நடவடிக்கைகளை நாட்டின் பிரதான நகரங்களில் முன்னெடுத்துள்ளது. இதனூடாக வாடிக்கையாளர்களுக்கு மொபைல் புரோட்பான்ட் மற்றும் நிலையான வயர்லெஸ் அணுகல் கட்டமைப்புகளில் 5G இன் அதிவேக தொழில்நுட்ப அனுகூலங்களை அனுபவிக்கக்கூடியதாக இருக்கும்.

5G பயன்படுத்தக்கூடிய சாதனத்தைக் கொண்டுள்ள வாடிக்கையாளர்களுக்கு, SLT-MOBITEL இன் 5G வணிக அறிமுகத்துக்கு முன்னரான பரீட்சார்த்த வலையமைப்பு சேவையை கொழும்பு, கண்டி, அநுராதபுரம், காலி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதான நகரங்களில் அனுபவிக்கக்கூடியதாக இருக்கும்.

மேலும், SLT-MOBITEL இனால் அண்மையில் புதிய 5G உட்கட்டமைப்பு வசதிகள் கொழும்பில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. 5G திறனுடைய சாதனத்தை கொண்டிருக்காத வாடிக்கையாளர்கள் வரையறுக்கப்பட்ட SLT-MOBITEL விற்பனையகமொன்றுக்கு விஜயம் செய்து 5G தொழில்நுட்பத்தை அனுபவிக்க முடியும்.

அதிவேகம், பரந்த இணைப்பு, புதிய உள்ளடக்கமான அனுபவங்கள் போன்றவற்றைக் கொண்ட அடுத்த தலைமுறை வயர்லெஸ் தொடர்பாடல் அம்சமாக 5G அமைந்துள்ளது. *HD Video Streaming, Augmented Reality, Virtual Reality, Factory Automation, Remote Operations, Mission Critical Communications, Massive IOT* மற்றும் பரந்தளவு எல்லைகளற்ற இணைப்பு வசதிகளை நுகர்வோருக்கும், வர்த்தகங்களுக்கும் வழங்கும் வகையில் அமைந்துள்ளது.

இலங்கையின் டிஜிட்டல் மாற்றியமைப்பில் முன்னோடி எனும் வகையில், SLT-MOBITEL இனால் நாடு முழுவதிலும் தொடர்ச்சியாக 5G தொழில்நுட்பத்தின் அறிமுகத்துக்கான தேவை வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

2019 ஆம் ஆண்டு முதல், SLT-MOBITEL இனால் நாடு முழுவதிலும் 5G அறிமுகப்படுத்தல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. 2019 ஏப்ரல் மாதத்தில், SLT-MOBITEL மொபைலினால் தெற்காசிய பிராந்தியத்தின் முதலாவது மொபைல் வலையமைப்பினூடாக வணிக மொபைல் ஸ்மார்ட்ஃபோன் ஒன்றை தனது 5G வலையமைப்புடன் சாதனை மிகுந்த வேகத்தில் இணைத்து 5G ஐ அறிமுகம் செய்திருந்தது.

தற்போது, இலங்கையில் 5G வணிக செயற்பாடுகளுக்கான அனுமதியை பெற்றுக் கொடுக்கும் செயன்முறை இலங்கை தொலைத்தொடர்பாடல்கள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் (TRCSL) முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளது. உரிய அனுமதிகள் வழங்கப்பட்டதன் பின்னர், SLT-MOBITEL இனால் அதன் 5G வலையமைப்பை மேலும் விரிவாக்கம் செய்து, டிஜிட்டல் மேம்படுத்தலை முன்னெடுப்பதுடன், அதிகம் உள்ளடக்கமான டிஜிட்டல் பொருளாதாரத்துக்கு பங்களிப்பு வழங்கக்கூடியதாக இருக்கும்.

தேசத்தின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநர் எனும் வகையில் SLT-MOBITEL இனால் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த அனுபவங்களை ஏற்படுத்திக் கொடுக்க எதிர்பார்க்கப்படுவதுடன், அதில் 5G, Narrowband Internet of things (NB-IoT), Mission Critical Communications (MCPTT), Artificial Intelligence (AI) போன்றன அடங்கியுள்ளன.

வாடிக்கையாளர்களுக்கு ஒப்பற்ற இணைப்புத்திறனை அனுபவிக்கச் செய்யும் அர்ப்பணிப்பு மற்றும் உயர் பாவனையாளர் அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுப்பது போன்றவற்றுக்காக SLT-MOBITEL மொபைலுக்கு Ookla இனால் இலங்கையின் வேகமான மொபைல் வலையமைப்பு 2021 எனும் கௌரவிப்பு வழங்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியான மூன்றாவது தடவையாக இந்த கௌரவிப்பை SLT-MOBITEL பெற்றிருந்தது. நிலையான மற்றும் மொபைல் புரோட்பான்ட் வலையமைப்பு பரிசோதனை அப்ளிகேஷன், டேட்டா மற்றும் பகுப்பாய்வு செயற்பாடுகளில் சர்வதேச முன்னோடியாக Ookla அமைந்துள்ளது. விருதினூடாக SLT-MOBITEL இன் வலையமைப்பு சிறப்பை மீளஉறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், டிஜிட்டல் உள்ளடக்கமான மற்றும் கிராமிய இணைப்புத்திறனை மேம்படுத்தும் வகையில் SLT-MOBITEL இனால் தேசிய மட்ட செயற்திட்டங்கள் TRCSL உடன் இணைந்து முன்னெடுக்கப்படுகின்றன. இதில் தேசத்துக்கு 100% 4G LTE வலையமைப்பை ஏற்படுத்திக் கொடுப்பதும் அடங்கியுள்ளது. வணிக ரீதியில் 5G வலையமைப்பு சேவைகளை அறிமுகம் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்படும் நிலையில், SLT-MOBITEL இனால் 5G வலையமைப்பை மேம்படுத்தும் பணிகளில் தொடர்ச்சியான முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இலங்கையின் புரோட்பான்ட் சேவைகளை மேம்படுத்துவதில் பெருமளவு முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# கொமர்ஷல் வங்கி தகவல் தொழில்நுட்பக் கூடங்கள் அன்பளிப்பு

சகல வசதிகளும் கொண்ட மேலும் நான்கு தொழில்நுட்பக் கூடங்களை கொமர்ஷல் வங்கி பாடசாலைகளுக்கு அன்பளிப்புச் செய்துள்ளது. தனது கூட்டாண்மை சமூகப் பொறுப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள இந்தத் தகவல் தொழில்நுட்ப ஆய்வு கூடங்கள் மூலம் மேலும் 7,600 மாணவர்கள் தமது தகவல் தொழில்நுட்ப பாடங்கள் சம்பந்தமான செய்முறை பயன்களைப் பெறவுள்ளனர்.



கொமர்ஷல் வங்கியின் கூட்டாண்மை சமூகப் பொறுப்பு நிதியம் இதுவரை 243 தகவல் தொழில்நுட்ப ஆய்வுகூடங்களை, தேவைகளைக் கொண்ட பாடசாலைகளுக்கு அன்பளிப்புச் செய்துள்ளது. வங்கியின் தகவல் தொழில்நுட்ப கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இவை வழங்கப்பட்டுள்ளன.

முதலிந்து டேவிட் மெண்டிஸ் மகா வித்தியாலயம் திம்பிரிகஸ்கட்டுவ, போலவலன நிமல மரியா மகா வித்தியாலயம் நீர்கொழும்பு, ஹரிஸ்சந்திர கல்லூரி நீர்கொழும்பு, கம்பளை தேவி பாலிகா வித்தியாலயம் ஆகிய தகவல் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப பாடவிதானத்தை உள்ளடக்கிய பாடசாலைகளுக்கு இந்த ஆய்வுகூடங்கள் வழங்கப்பட்டன. தேசிய ரீதியாக கணினிக் கல்வியை மேம்படுத்தும் வகையிலும், மாணவர்களின் டிஜிட்டல் கற்கை எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும் நீண்ட கால நோக்கத்தின் அடிப்படையில் இவை வழங்கப்பட்டுள்ளன.

கொமர்ஷல் வங்கியின் இந்த முதலீடானது ஏற்கெனவே உள்ள தகவல் தொழில்நுட்பக் கூடங்களை புனரமைத்தல், விரிவாக்கல் என்பனவற்றையும் உள்ளடக்கியது. தகவல் தொழில்நுட்பக் கூடத்துக்கு தேவையான கணினிகள், மேசைகள், கதிரைகள், அச்சு இயந்திரங்கள் அவற்றுக்குத் தேவையான மேசைகள், மல்டிமீடியா புரொஜக்டர்கள் என்பன இந்தத் திட்டத்தின் கீழ் அன்பளிப்புச் செய்யப்படுகின்றன.

சென்னை

அ.தி.மு.க ஒற்றை தலைமை பிரச்சினை:

# பொதுக்குழு தீர்மானத்துக்கு தயாராகும் இ.பி.எஸ்

## நீதிமன்றத்தில் தடை பெற முயலும் ஓ.பி.எஸ்

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஒற்றை தலைமை பிரச்சினை பெரிதாகியுள்ள நிலையில், பன்னீர்செல்வத்தின் சொந்த மாவட்டமான தேனியில் முக்கிய நிர்வாகிகள் பெரும்பாலானோர் பழனிசாமிக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, ஒற்றை தலைமை தீர்மானத்தை பொதுக்குழுவில் நிறைவேற்றுவது என பழனிசாமி தரப்பு முடிவு செய்துள்ளதாகவும், தற்காலிகமாக பொதுக்குழுவை ஒத்திவைக்க பன்னீர்செல்வம் முடிவு செய்துள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி அ.தி.மு.க பொதுக்குழு கூட உள்ள நிலையில், பழனிசாமி தரப்பினர், ஒற்றை தலைமையை வலியுறுத்துகின்றனர்.



ஆனால், ஒருங்கிணைப்பாளர் பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள், இரட்டை தலைமை என்பதில் உறுதியாக உள்ளனர்.

இந்நிலையில் பழனிசாமி, தொடர்ந்து தனது வீட்டில் ஆதரவாளர்களுடன் ஆலோசனை நடத்தி வருகின்றார்.

ஒற்றை தலைமை தீர்மானத்தை நிறைவேற்ற பழனிசாமி முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்நிலையில், பொதுக்குழுவை தற்காலிகமாக ஒத்திவைக்க பன்னீர்செல்வம் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. இது தொடர்பாக தனது முடிவை தெரிவித்துள்ள அவர், "கடந்த 3 ஆண்டுகளாக சமரசம் செய்து கொண்டது போதும், இனிமேல் சமரசத்திற்கு இடமில்லை" என்றார். தனது ஆதரவு மாவட்ட செயலாளர்கள், பொதுக்குழு நிர்வாகிகள் என 200 முதல் 250 பேரிடம் பன்னீர்செல்வம் கையெழுத்து வாங்கி உள்ளதாக கூறப்படுகிறது.

இதேவேளை சமூகவலைத் தளங்களில், இதுதொடர்பான காரசாரமான விவாதம் சென்று கொண்டிருக்கிறது. இருவேறு ஆதரவாளர்களும் தங்கள் தலைவரே பொதுச் செயலாளராக வர வேண்டுமென, பகிரங்கமாக குரல் கொடுக்க தொடங்கிவிட்டனர் .பரஸ்பரம் இ.பி.எஸ்., - ஓ.பி.எஸ்., மீது 'மீம்ஸ்' போர் தொடுத்து வருகின்றனர்.

புதுடெல்லி

# இந்தியாவுக்கு 135ஆவது இடம்

சர்வதேச சிந்தனைக் குழுவான இன்ஸ்டிடியூட் பார் எகனாமிக்ஸ் அண்ட் பீஸ் (வெளியிட்டுள்ள குளோபல் பீஸ் இன்டெக்ஸ் 2022 அறிக்கையில், ஐஸ்லாந்து உலகின் மிகவும் அமைதியான நாடாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது. தொடர்ந்து நியூசிலாந்து மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகள் உள்ளன.

இந்த அறிக்கையில் உலகின் 163 சுதந்திர நாடுகள் மற்றும் பிராந்தியங்கள் இடம்பெற்றுள்ளது. இந்த தரவரிசையில், இந்தியா கடந்த ஆண்டைவிட முன்னேறி 135வது இடத்தை பிடித்துள்ளது. கடந்த ஆண்டு இதன் எண்ணிக்கை 138 ஆக இருந்தது. 2022 இல், அமைதியின் அடிப்படையில் குளோபல் பீஸ் இன்டெக்ஸ் 'குறைந்த பிரிவில்' வைக்கப்பட்டுள்ளது.

சென்னை

# பெண்களின் உள்ளாடைக்குள் கரன்சிகள்

சென்னையில் இருந்து கொழும்புக்கு செல்லும் இண்டிகோ ஏர்லைன்ஸ் விமானத்தில் பயணம் செய்ய வந்த பயணிகளை, விமான நிலைய சுங்க அதிகாரிகள் சோதனையிட்டனர்.



திருச்சியை சேர்ந்த லட்சுமி (35), கனகவல்லி (29), திண்டுக்கல்லை சேர்ந்த மாரியம்மாள் (39) ஆகிய மூன்று பெண் பயணிகளும் தமது உள்ளாடைகளுக்குள் கட்டுக்கட்டாக அமெரிக்க டொலர் உள்ளிட்ட வெளிநாட்டு கரன்சிகளை மறைத்து வைத்திருந்தனர். அதன் மதிப்பு 35 இலட்சம் இந்திய ரூபாய் ஆகும். மூன்று பெண்களையும் சுங்க அதிகாரிகள் கைது செய்து விசாரிக்கின்றனர்.

சென்னை

# முட்டி சவ்வை தானம் வழங்கிய தந்தை

நாமக்கல்லைச் சேர்ந்தவர் பாலமுருகன். நெசவுத் தொழிலாளி. இவரது மகள் மாரியம்மாள் (19), இந்திய கால்பந்து அணியில் முக்கிய வீராங்கனையாக உள்ளார். 8 ஆண்டுகளாக விளையாடி வரும் அவர், கடந்த 2 ஆண்டுகளாக இந்திய அணியில் விளையாடி வருகிறார். இடதுகால் ஆட்டக்காரரான இவர், பிரேசில், சுவீடன், ஈரானுக்கு எதிரான போட்டிகளில் 12 கோல்களைப் போட்டுள்ளார்.

இந்நிலையில், பெங்களூருவில் நடைபெறவுள்ள போட்டிக்காக சென்னை நேரு ஸ்டேடியத்தில் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது அவருடைய இடதுகால் முட்டியில் சவ்வு (ஏசிஎல் சவ்வு) கிழிந்துள்ளது. இவரது தந்தை, மகளுக்காக தனது மூட்டு சவ்வை தானம் கொடுக்க முன்வந்தார்.

தேனி

சமூக வலைதளத்தை பயன்படுத்தி

# நூதன மோசடி

தேனி மாவட்டம், பெரியகுளத்தைச் சேர்ந்தவர் முருகானந்தம். இத்தாலியில் பணிபுரிந்து வருகிறார். முகநூலில் இவரைத் தொடர்பு கொண்ட எமிலி ஜோன்ஸ் என்பவர், தனது வாட்ஸ்அப் எண்ணை கொடுத்துள்ளார். அதில் முருகானந்தம் தொடர்பு கொண்ட போது, நான் சிரியா இராணுவத்தில் நர்ஸாக பணிபுரிகிறேன். இங்குள்ள கலவரக்காரர்களிடம் இருந்து பெரும்தொகை பணம் கைப்பற்றப்பட்டுள்ளது. அதை இராணுவத்தினர் தமக்குள் பிரித்துக்கொள்ள முடிவு செய்துள்ளனர். இதன்படி எனது பங்காக ரூ.15.5 கோடி வர உள்ளது. இதை பாதுகாப்பாக வைத்திருந்தால் 30 சதவீதம் கொமிஷன் தருவதாகவும், பணத்தை பார்சலில் அனுப்புவதாகவும் கூறியுள்ளார்.

இதற்கு ஒப்புக்கொண்ட முருகானந்தம், முகவரியை கொடுத்துள்ளார். சில நாள்களுக்குப் பின்பு புதுடெல்லி விமான நிலையத்திலிருந்து பேசுவதுபோல ஒருவர் பேசியுள்ளார். எமிலி ஜோன்ஸ் பார்சல் அனுப்பி இருப்பதாகவும், அதற்கு வரி செலுத்த வேண்டும் என்று கூறியுள்ளார்.இதனை நம்பிய முருகானந்தம் ரூபாய் 8 இலட்சத்து 64 ஆயிரத்தை அனுப்பி உள்ளார். இவ்வாறு மொத்தம் ரூ.36 இலட்சத்து 31 ஆயிரத்தைப் பெற்றுள்ளார்.

சென்னை

# பாலியல் தொழிலுக்கு அனுமதி

சொந்த விருப்பத்தின் பேரில் பாலியல் தொழிலில் ஈடுபடும் மேஜரான தனிப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுப்பதை தவிர்க்க வேண்டும் என பொலிஸாருக்கு உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

சென்னை, சிந்தாதிரிப்பேட்டைப் பகுதியில் உள்ள மசாஜ் சென்டரில் பாலியல் தொழில் நடைபெறுவதாக வந்த முறைப்பாட்டில், பொலிஸார், அந்த மசாஜ் சென்டரின் உரிமையாளர் உள்ளிட்ட சிலரை கைது செய்தனர்.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட உதயக்குமார், தனக்கு எதிரான வழக்கை ரத்து செய்யக்கோரி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.



இந்த வழக்கின் தீர்ப்பில் நீதிபதி கூறியதாவது; மனுதாரரின் மீதான குற்றச்சாட்டுக்கு எந்தவொரு ஆதாரமும் இல்லை, என வழக்கை தள்ளுபடி செய்ததுடன், உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி பாலியல் விடுதிகளை நடத்துவதுதான் சட்டவிரோதம். மேஜரான தனிப்பட்ட நபர்கள் தங்களது சொந்த விருப்பத்தின் பேரில் பாலியல் தொழிலில் ஈடுபட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதை தவிர்க்க வேண்டும் என்றார்.

கம்பம்

# மகனை கல் வீசி கொன்ற தந்தை

தேனி மாவட்டம் தேவதானப்பட்டியைச் சேர்ந்தவர் நாகராஜ் வயது 23. அத்தை மகள் நவீனாவை காதல் திருமணம் செய்தார். ஓராண்டில் காதல் தேய்ந்தது. சீதனம் கேட்டு கொடுமை தொடர்ந்தது. கர்ப்பம் சுமந்த நவீனா, நாகராஜை பிரிந்து, தாய் வீட்டிற்கு சென்றார்.

அங்கே ஒரு மாதத்துக்கு முன்னர் ஆண் குழந்தை பிறந்தது.



குழந்தையை பார்க்க நாகராஜ் மாமியார் வீட்டுக்கு வந்தார். அங்கு அவருக்கும் மனைவிக்கும் மாமியார் முத்துலட்சுமிக்கும் இடையில் தகராறு ஏற்பட்டது. ஆத்திரமடைந்த நாகராஜ், தெருவில் கிடந்த கல்லை எடுத்து நவீனாவை நோக்கி வீசினார்.

நவீனா கையில் வைத்திருந்த குழந்தையை கல் தாக்கியது. அன்போடு அணைக்க வேண்டிய தந்தையின் கை வீசிய கல், அந்த மழலையை மரணமடையச் செய்தது. பொலிஸார் நாகராஜை கைது செய்தனர்.

அமெரிக்கா

# சர்ச்சையில் சிக்கிய எலோன்

உலகப் பணக்காரர்களில் ஒருவராகத் திகழும் எலோன் மஸ்க், 'ஸ்பேஸ் எக்ஸ், டெஸ்லா' ஆகிய நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரியாகச் செயற்பட்டு வருகின்றார்.

இவர் அண்மையில் டுவிட்டர் நிறுவனத்தினுடைய 9.2% பங்குகளை வாங்கிய நிலையில், மொத்தமாக அந்நிறுவனத்தை 44 பில்லியன் டொலர்களுக்கு வாங்கப்போவதாக் கூறியிருந்தார். எனினும் குறித்த திட்டமானது ஒரு சில காரணங்களுக்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தை சேர்ந்த பணியாளர்கள் ஒன்றிணைந்து, அந்நிறுவனத் தலைவரான க்வின் ஷாட்வெல் என்பவருக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

அதில்' எலோன் மஸ்க் தீமை தரக்கூடிய வகையில் மேற்கொண்ட டுவிட்டர் நடவடிக்கையை வன்மையாக கண்டிக்கிறோம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவன பணியாளர்கள், தலைமை செயற்பாட்டு அதிகாரியான எலோன் மஸ்க்கின் நடவடிக்கைகளை எதிர்த்து கடிதம் எழுதியதால் அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான்

## அதிசய ஆட்டுக் குட்டி



பாகிஸ்தானி ன் கராட்சி மாகாணத்தை சேர்ந்தவர் முகமது 'ஹசன் நரிஜோ'.

இவர் தனது வீட்டில் ஆடுகளை வளர்த்து வருகிறார். இந்நிலையில், அவரது ஆட்டுப்பண்ணையில் கடந்த 2 வாரங்களுக்கு முன்பு ஆடொன்று குட்டியை ஈன்றுள்ளது.


எனினும் அவ் ஆட்டுக்குட்டியின் காதானது, மற்ற ஆட்டுக்குட்டிகளின் காதை விட மிகவும் நீளமாக இருந்ததைக் கண்டு, ஹசன் நரிஜோ மிகவும் ஆச்சரியம் அடைந்துள்ளார்.

இந்நிலையில் குறித்த ஆண்டுக்குட்டியின் புகைப்படங்கள் இணையத்தில் அவர் பகிர்ந்துள்ளதோடு " சம்பா எனப் பெயரிட்ட குறித்த ஆட்டுக்குட்டியின் ஒவ்வொரு காதும் சுமார் 50 சென்றி மீற்றர் நீளம் கொண்டது " எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் குறித்த ஆட்டுக் குட்டியின் புகைப்படங்கள் இணையத்தில் தற்போது வைரலாகி வருகின்றன.

ருமேனியா

## இப்படியும் ஒரு வீடா?



ருமேனியாவின் அவ்ரிக் நகரத்தில் உள்ள ஃபேகராஸ் மலையடிவாரத்தில் 'பிராம்புரா அட்வென்சர் பார்க் ' என்ற பூங்கா அமைந்துள்ளது.

இப் பூங்காவில் தலைகீழாக கட்டப்பட்டுள்ள வீடொன்று சுற்றுலாப் பயணிகளை வெகுவாக கவர்ந்து வருகிறது.

7 பாகை சாய்வாக கட்டப்பட்டுள்ள குறித்த வீட்டில் பொருட்கள் கூட தலைகீழாகவே வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த பூங்கா வளாகத்திற்குள் உணவகம், மதுபான விடுதி, சிறிய உயிரியல் பூங்காகளும் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேஷியா

## 600 வருடங்களாக எரிமலைக்குக் காணிக்கை





இந்தோனேஷியாவில் வசித்துவரும்டெங்கர் பழங்குடியினத்தைச் சேர்ந்த மக்கள் சுமார் 600 ஆண்டுகாலமாக, ப்ரோமோ மலையைச் சுற்றியுள்ள எரிமலைக்கு ஆடுகள், கோழிகள், பழங்கள், பூக்கள் மற்றும் காய்கறிகளை காணிக்கையாக செலுத்தி வருகின்றனர்.

கிழக்கு ஜாவாவில் உள்ள இப் பழங்குடி மக்கள், தங்களது வேளாண்மை செழிக்கவும், மக்கள் மகிழ்ச்சியுடன் வாழவும் ஒவ்வொரு ஆண்டும் இவ்வாறு தமது இஷ்ட தெய்வங்களை மனதில் நிறுத்தி குறித்த எரிமலைக்கு காணிக்கை செலுத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான்

## தெருவோரத்தில் உணவு விற்கும் பிரபல ஊடகவியலாளர்



ஆப்கானிஸ்தானில் இருந்து கடந்த வருடம் அமெரிக்கப் படைகள் வெளியேறியதைத் தொடர்ந்து அந்நாட்டில் தலிபான்களின் ஆட்சி இடம் பெற்று வருகின்றது.

எனினும் உலக நாடுகள் பல ஆப்கானிஸ்தான் மீது பல தரப்பட்ட தடைகளை விதித்துள்ளதால் அந்நாட்டில் கடுமையான பொருளாதார நெருக்கடியும் நிலவி வருகின்றது.

இந்நிலையில் தலிபான்களின் ஆட்சியால் வேலையை இழந்த மூசா முகமதி' என்ற பிரபல ஊடகவியலாளர் வறுமை காரணமாக 'தெரு ஓரங்களில் உணவு பொருட்களை விற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.

இது குறித்து இணையத்தில் வெளியான புகைப்படங்கள் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன.

அமெரிக்கா

## மக்கள் முன்னிலையில் தவறி விழுந்த ஜோ பைடன்



அமெரிக்காவில் டெலவர் கடற்கரை வீதியில் , நேற்று முன்தினம் (18) காலை, சைக்கிள் ஓட்டப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த ஜனாதிபதி ஜோ பைடன், கால் இடறி கீழே விழுந்ததால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

சம்பவ தினத்தன்று அப்பகுதியில் இருந்த ஆதரவாளர்கள் மற்றும் செ ய்தியாளர்கள், அவருடன் பேச முயற்சி செய்ததாகவும், இதனையடுத்து அவர் சைக்கிளை நிறுத்த முயன்ற போது கால் இடறி கீழே விழுந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதன் போது அவருக்குக் கால் மூட்டு பகுதியில் லேசான காயம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

மெக்சிகோ

## குத்துச் சண்டை வீரர்கள் படைத்த உலக சாதனை





ஒரே நேரத்தில் 14, 299 வீரர், வீராங்கனைகள் இணைந்து குத்துச் சண்டைப் பயிற்சி செய்து உலக சாதனை படைத்துள்ளனர்.

மெக்சிகோ தலைநகரில் நடந்த இந்நிகழ்வில் அந்நாட்டு தேசியக் கொடியின் வர்ணங்களில் உடையணிந்திருந்த குறித்த வீரர்கள் , 30 நிமிடங்கள் வரை பயிற்சி மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் 3,000 வீரர், வீராங்கனைகளை கொண்டு ரஷ்யா நிகழ்த்திய சாதனையை தற்போது மெக்சிகோ அரசு மற்றும் உலகக் குத்துச் சண்டை சம்மேளனம் இணைந்து முறியடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




இலங்கைக்கு எதிராக

# 291 ஓட்டங்களைப் பெற்ற அவுஸ்திரேலியா

இலங்கைக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 291 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியாவின் அணித்தலைவர் ஆரோன் பின்ஞ், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அவுஸ்திரேலிய அணி சார்பாக காயமடைந்த ஸ்டீவ் ஸ்மித் மற்றும் பற் கமின்ஸ், மிற்செல் ஸ்வப்ஸனை மிற்செல் மார்ஷ், கமரொன் கிறீன், ஜ்ஹை றிச்சர்ட்ஸன் ஆகியோர் பிரதியிட்டிருந்தனர்.


இலங்கை சார்பாக தனுஷ்க குணதிலகவை நிரோஷன் டிக்வெல்ல பிரதியிட்டிருந்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா ஆரம்பத்திலேயே டேவிட் வோர்னரை துஷ்மந்த சமீரவிடம் இழந்தது. பின்னர் குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் மிற்செல் மார்ஷையும் டுனித் வெல்லலாகேயிடம் இழந்திருந்தது.

இந்நிலையில், பின்ஞ்சுடன், மர்னுஸ் லபுஷைன் இனிங்ஸை நகர்த்திய நிலையில் 29 (36) ஓட்டங்களுடன் ஜெஃப்ரி வன்டர்சேயிடம் வீழ்ந்ததோடு, உடனேயே பின்ஞ்சும் 62 (85) ஓட்டங்களுடனும் வன்டர்சேயிடம் வீழ்ந்தார்.

பின்னர் அலெக்ஸ் காரியும், ட்ரெவிஸ் ஹெட்டும் இனிங்ஸை நகர்த்திய நிலையில் 49 (52) ஓட்டங்களுடன் தனஞ்சய டி சில்வாவிடம் காரி வீழ்ந்தார்.

தொடர்ந்து கிளென் மக்ஸ்வெல்லின் 33 (18) மூலம் ஓட்டங்கள் வேகமாகச் சேகரிக்கப்பட்டதுடன், அவர் வன்டர்சேயிடம் வீழ்ந்தபோதும் ட்ரெவிஸ் ஹெட்டின் ஆட்டமிழக்காத 70 (65) ஓட்டங்களோடு 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 291 ஓட்டங்களை அவுஸ்திரேலியா பெற்றது.



## செல்சி செல்லும் ஸ்டேர்லிங்க்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் முன்களவீரரான ரஹீம் ஸ்டேர்லிங்கை கைச்சாத்திடுவதில் இன்னொரு பிறீமியர் லீக் கழகமான செல்சி ஆர்வமாயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

27 வயதான ஸ்டேர்லிங், சிற்றியுடன் இன்னும் ஓராண்டு ஒப்பந்தத்தைக் கொண்டிருக்கின்ற நிலையில் 225 போட்டிகளில் 91 கோல்களை சிற்றிக்காகப் பெற்றிருந்தார்.

பங்களாதேஷுக்கெதிரான முதலாவது டெஸ்டில்

## மே. தீவுகளின் வெற்றிக்கு 35 ஓட்டங்களே தேவை



பங்களாதேஷுக்கெதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், அன்டிகுவாவில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான முதலாவது டெஸ்டில் வெற்றி பெறுவதற்கு 35 ஓட்டங்களையே மேற்கிந்தியத் தீவுகள் பெற வேண்டியுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

பங்களாதேஷ்: 103/10 (துடுப்பாட்டம்: ஷகிப் அல் ஹஸன் 51, தமிம் இக்பால் 29 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேடன் சியல்ஸ் 3/33, அல்ஸாரி ஜோசப் 3/33, கைல் மேயர்ஸ் 2/10, கேமார் றோச் 2/21)

மே. தீவுகள்: 265/10 (துடுப்பாட்டம்: கிறேய்க் பிறத்வெய்ட் 94, ஜெர்மைன் பிளக்வூட் 63, என்குறுமஹ் பின்னர் 33, ஜோன் கம்பெல் 24, குடகேஷ் மொட்டி ஆ.இ 23 (21) ஓட்டங்கள். பந்துவீச்சு: மெஹிடி ஹஸன் மிராஸ் 4/59, எபொடொட் ஹொஸைன் 2/65, காலிட் அஹ்மட் 2/59, முஸ்தபிசூர் ரஹ்மான் 1/30, ஷகிப் அல் ஹஸன் 1/48)

பங்களாதேஷ்: 245/10 (துடுப்பாட்டம்: நுருல் ஹஸன் 64, ஷகிப் அல் ஹஸன் 63, மஹ்முடுல் ஹஸன் ஜோய் 42, தமிம் இக்பால் 22, லிட்டன் தாஸ் 17, நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ 17 ஓட்டங்கள். பந்துவீச்சு: கேமார் றோச் 5/53, அல்ஸாரி ஜோசப் 3/55, கைல் மேயர்ஸ் 2/30)

மே. தீவுகள்: 49/3 (துடுப்பாட்டம்: ஜோன் கம்பெல் ஆ.இ 28, ஜெர்மைன் பிளக்வூட் ஆ.இ 17 ஓட்டங்கள். பந்துவீச்சு: காலிட் அஹ்மட் 3/14)



## பரிஸ் ஸா ஜெர்மைன் செல்லும் சந்தேஸ்?

பிரெஞ்சு லீக் 1 கழகமான லில்லியின் மத்தியகளவீரரான றெனட்டோ சந்தேஸைக் கைச்சாத்திடுவதை இன்னொரு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைன் நெருங்குவதாகக் கூறப்படுகிறது.

முன்னதாக இத்தாலிய சீரி ஏ கழகமான ஏ.சி மிலன், 24 வயதான சந்தேஸைக் கைச்சாத்திடுவதாக இருந்த நிலையில், சந்தேஸுக்காக 30 மில்லியன் யூரோக்களை லில்லி வினவுகின்ற நிலையில் 15 மில்லியன் யூரோக்களை வழங்க மிலன் சம்மத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. லில்லியுடன் இன்னும் ஓராண்டு ஒப்பந்தத்தை சந்தேஸ் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 07 ஜூன் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.